ஓம் விநாயகநம






# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை


தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது

வெள்ளிக்கிழமை [11-7-1980]

ரௌத்திரி வருஷம் ஆனி மீ 27உ

இதழ்: 3 சுடர்: 15


University of Jaffna Sri Lanka RECEIVED





தர்மத்தைப் போதிக்கும் மலர்

# இராட்சதச்செயலான ஒலிபெருக்கி அருள்நெறியின் அழிவிற்குரியதே என்பதை உறுதியுடன் நம்புங்கள்

## மின்கீர்த்தனத்தின் மூலமாகக் கலக்கம் செய்யாமல் சாந்தத்தின்மூலம் நலத்தைப் பெறுவோம்

உலகில் எல்லாத் தீமைகட்கும் அடிப்படையாவது ஆரவாரமும் அந்தரப்படும் மனமுமேயாகும். ஆரவாரப்செய்து அங்கலாய்ப்போர் தமக்குமே கேடுவிளைத்து நாட்டின் நலனுக்குமே கெடுவிளைப்பர். இந்த நிலையில் ஆரவாரம் விரும்பிய மனம் உயர்ந்த இலட்சியங்களைச் சடைப்பிடித்து நலைபெற்றிட சம்மதம் கொடாது தாழ்வான வழிக்கே எம்மைத் தள்ளிவிடும.

பெரியோர்கள் மனதை முட்டைக்கு ஒப்பிடுகின்றனர். ஓர் முட்டையை எந்தவிதமாக நிமிர்த்தி நேராக வைக்கலாம் என்றாலும் முட்டை சரிந்தே வீழும், இதே போன்றுதான் வாழ்விலும் உயர்வான இலட்சியங்களைப் பெற்றிட நிமிர்ந்து நிற்க மனம் முற்பட்டாலும் சரிந்தே விழ்கிறது.

கோயில் ஒரு அமைதிக்குரியஇடம். அங்குபோனால் மிக அமைதியுடன் நாம் நடக்கவேண்டுமென்பதை எல்லார்க்கும் தெரியும். தெரியாமல் இல்லை; ஆனால் தாழ்வுற்ற மனம் கோயில் போனாலும் அங்கு ஆரவாரம் அமைதி இன்மை கூக்குரல சண்டித்தனம் இவற்றை நாடுகின்றபோது அது நிமிர்ந்து நிற்கவேண்டியது சரிந்தே விழ்கின்றது,

ஏன் இப்படி எனக் கேட்டால் மனிதனுடைய செயல் இராட்சதர்போன்றநிலையில் வருகின்ற காரணத்தால் உயர்வை எண்ணாது மனம் தாழ்வுறுகின்றது. இராட்சதர் என்பவர் மனிதரை உண்பவர் என்றும் சொல்வார்கள். இராட்சதர் ஒருபோதும் பிற உயிரின் வேதனை அறியார்கள். அவர்கள் தன்சுகமும் தன்நலமும் அன்றி பிறர்நலமும் பிறர் வாழ்வும் எட்டுணையேனும் எண்ணாதவர்.

இந்த நிலையில் இராட்சதருடைய குணம் எப்படி இருக்கும் என்பதை கீழேதரப்படும் தேவாரத்தால் நன்கு நாம் உணரலாம். திருநாவுக்கரசர் பெருமான் இராட்சதரின் குணங்களை எவ்வளவு விளக்கமாகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றார். ஒவ்வொரு பாட்டிலும் அவர்பற்றியதே பேச்சு. இந்த முறையில வன்கண்ணர் நலம் ஒன்றும் அறியார் என்றே அவரைச் சொல்கின்றார்.

வன்கண்ணர் நலமறியார் என்றபோது அவர்கள் செயல் எப்படி சிந்தியுங்கள். வன்கண்மை என்பது கொடுமை. கொடுமை என்றால் என்ன? இதை உணரும்போது பிறஉயிரைத் துன்புறவைத்தலே கொடுமையாகிறது. பிறருடைய பொருளை அபகரித்து பொய் சொல்லி ஏமாற்றிப் பொருள்வேண்டி சண்டித்தனம்பேசி பல பாதகங்களையும் புரிதல் கொடுமையாகும்.

நலம் என்றால் தன்பொருளை பிறர் அனுபவிக்கப் பார்த்து இன்புறுதலே சுருக்கமான பொருளாகும் ஒருவார்த்தை! அதைஉணர்வதானால் எல்லா உயிரையும் தன்னுயிரைப்போல எண்ணுவதே பெரிய நலமாகும். எல்லா உயிரையும் தன்னுயிர்போல் எண்ணும் எண்ணமே சைவத்தின் அடிப்படையாகும். இதை இன்று நம்நாட்டில் உள்ள [illegible] ஒரு பிராமணர் அல்லது பிரசங்கம் செய்வார் உணர முடியுமோ? உணர்ந்தால் இவர் நடத்தைகள் இன்று எப்படி இருக்க வேண்டும்! எப்படி இருக்கும் எண்ணிப் பாருங்கள்.

எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணவல்ல ஒருவன் ஒரு கோயில் சென்று வழிபடுவானாகில அவன் கேட்டது நிச்சயமாக கிடைக்கும். கோயில் சென்று இன்று வழிபடும் கூட்டத்தினரில் எத்தனைபேர் எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ண வல்லார்?

சைவம்பேசும் தென் இந்தியர் எவரும் எவ்வுயிரும் தன் உயிர் போல் எண்ணும் கோட்பாட்டில் யார் நிற்கிறார்? அப்படியாக எண்ணவல்லார்க்கு மடமும் வேண்டுமோ மடாதிபதியும் வேண்டுமோ குருக்களும் கொடுக்குக் கட்ட வேண்டுமோ!

கீழேதரப்பட்ட தேவாரத்தை நன்குநோக்கினால் படைத்தல் காத்தல்அழித்தல் என்னும் மூவகைத் தொழிலினும் காத்தல் எதுவாக இருக்குமாயின் தருமத்தைக் காத்து தவநெறியை வளர்த்தலே காவல் தொழிலாயது. ஆதலினால் தருமம் காத்து தவத்தை வளர்த்திடலெனின் முதல் அதர்மம் செய்வார் தன்தீங்கினை உருப்படி உணர்த்தலாகும். அப்பால் அத்தீங்கினை உணர்ந்து திருந்ாதாரை சங்காரம் செய்து அழித்தொழித்தலாகும்.

இந்த ஒருநிலையில்தான் இராம அவதாரம் இடம்பெறுகிறது. தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கிய காலத்தில் காவல் கடவுளின் கலைகள் பூமியில் மனிதவடிவில் பிறக்கிறது. பிறந்து மனிதர் போன்று வாழ்ந்து அதர்மம் செய்வாரை அழித்தபின் தான் தனது இருப்பிடம் சேர்கிறது.

அறிவுக் அறிவாக அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் ஒரு பொருள் எல்லாம் அறியும்; அறியாது அறியும் நோக்காது நோக்கும். ஆகவே இன்று தருமம் அதற்குரிய கால்பங்குதானும் இன்று முற்றாகவே ஒழிந்தது.

எந்த ஒரு கோயிலிலோ அறநிலையங்களிலோ இல்லங்களிலோ தருமம் முற்றாக ஒழிந்ததை இன்று காண்கிறோம். தருமத்தை வேருடன் அழித்தவர் அறவோர் எனப்படும் அந்தணர்கள். இன்று எமது யாழ்ப்பாண நாட்டிலே அந்தணர்க்குரிய புலனடக்கம் அகிம்சை தயவு சிறிதேனுமுடைய ஒரு அந்தணரைக் காட்டுவீரோ? அப்படியாயின் இந்த அந்தணர் குலம் கோயிலில் பணி புரிவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

ஓர் இராட்சதனுடைய குணங்களுக்கும் இன்றுள்ள பிராமணர்க்கும் என்னவித்தியாசம்? ஏதாகிலும் பேச்சிலோ செயலிலோ என்செய்கிறார்கள்?

கடுகடுப்பில்லாத முகமுடைய ஒரு பிராமணரைக் காட்டவல்லீரோ? எல்லாப் பிராமணனுடைய முகத்தையும் பாருங்கள். இராட்சதர் போல் கோபம் மீறிட்டுவருகிறது. ஐயோ இவர் செலலும் வழி பிழை என்று யாரிடமாதல் சொல்லிவிட்டு என்ன அடுத்த செயல் நோக்குங்கள்? கேட்டுவைத்துக்கொண்டு கடவுள் சந்நிதி என்றும் உணராமல் பேசாத பேச்சு நடவாத நடத்தை நடக்கிறாரே இதை கட்டுப்படுத்த யாருக்கு முடியும்? திருவருள் ஒன்றிற்குத்தான் முடியும்.

முப்புரத்து அசுரரும் ஆலகாலமென்னும் நஞ்சும் போலவே இன்றுள்ள அந்தணர் வந்துள்ளனர். இதை எவரும் மறுக்கமுடியாது! எங்கே ஒருவர் இப்படியல்லாதவர் இருக்கிறார் காட்டுங்கள். தன்பிழையைத் தாம் ஏற்ற அந்தணனைக் காட்டுங்கள்?

இராவணன் இராட்சதன் ஆனால் ஓர் அந்தணன் புலத்தியனுடைய மகன். அவன் தவம் செயதவன். வரம் பெரிதும் உடையவன். சங்கீதத்தில் மிகததிறமை உடையவன். ஆனல் அவனுடைய நடத்தை அவனுக்குப் பின்னர் கேடுவிளைவித்தது.

அவன் செய்த அநீதிகள் பல. முனிவர் செய்யும் யாகங்கட்குக் கேடுகளை விளைவித்தான். பிற உயிர்களுக்கு பெருந்துன்பம் விளைவித்தான். சீதையைக் கவர்ந்தான். இப்படி எத்தனையோ பழிகள் செய்ய முடிவில் காவல் தெய்வம் இராம அவதாரமூலம அவனுடைய கொடுமையை அடக்கியது.

இதனாலே நாம் ஒன்று உணரலாம். பழிபாவங்களைப் புரிவோர் என்றோ ஒரு நாள் கேடுறுவர். அந்தக்கேடு காவல் தெய்வமூலம் நிகழும் அதை எல்லீரும் நம்புங்கள்.

பழிபாதகம் செய்தோர் இறந்தால் பின்னர் கொடிய இருளில் சேர்வர். இதை சம்பந்தசுவாமிகள் ஓர் பதிகமூலம் மிகு திறமாக "அம்பரம் அடைந்து சால அல்லல் படுவீர்" என்கின்றார். இந்தவார்த்தையை நன்மை பெறவிரும்பும் நீங்கள் யாவரும் நம்புங்கள்.

ஆதலினாலே நீங்கள் தவத்திற்கு அஞ்ச வேண்டாம்; கொலைக்கு அஞ்ச வேண்டாம்; ஆனால் பிறர்க்குத் துன்பம் விளைவிப்பதற்கு அஞ்சுங்கள். பிறர் மனம்நோக வேதனைப் படவைக்கும் செயல் எதனையும் செய்வதற்கு அஞ்சுங்கள்.

கோவிலில் ஒலிபெருக்கிப் பாவனை பொல்லாத பழியும் பாவமும் என்பதை நன்றாக நம்புங்கள். ஒலிபெருக்கி சுவாமிக்கு லயிற் அடித்தல் முதலிய செயல்களைப்புரியும் எக்கோவிலும் நன்மை அடையாது. அங்கு போய் தரிசித்து நீவிர் எந்தப்பிறவியிலும் நன்மை பெறமாட்டீர்! இதை உறுதியாக நம்புங்கள்.

தீமையும் நன்மையும் கடவுள் மக்கட்கு செய்வதில்லை. இது மக்கள் தத்தமது நடத்தையால் தேடிக் கொள்கிறார்கள். ஆதலினாலே ஒரு கோவிலிலே ஒலிபெருக்கி பாவித்தல் பலரையும் துன்புறுத்துவதாகவே இன்று அமைகின்றது.

ஒரு கோவிலில் சென்று நாம் கும்பிடமுடியாது. ஒரு தோத்திரம் செய்யமுடியாது. ஒரு செபம் செய்யமுடியாது. கோவில் சென்று மனதை ஆறுதலாய்வைத்திருந்து புலன்களை அடக்கப்பழக முடியாது. ஐயோ! இந்தஒலிபெருக்கி வந்தபின் கோவில் எல்லாம் தருமத்தின் கொலைக்களமாக மாறி உள்ளது

இந்த ஒரு உண்மையை நமது சைவ இளைஞர்கள் தம் மனதில் கொள்ளவேண்டும். சைவ இளைஞர்களே! நீங்கள் சிவ தர்மத்தை அழிக்கக்கூடாது. பதில் வளர்த்திட நினையுங்கள்.

தமிழனது பண்பில் ஒன்று எல்லா உயிர்வர்க்கத்தையும் நலமுறச் செய்யத் தொண்டுபுரிவது. ஆனலின்று மந்தி போல் மனப்பாங்குடைய சில இளைஞர்களால் நமது கலாச்சாரம் மிகவும் கேடுற்று விட்டது.

தமிழ் அரசியல்வாதிகள் சுத்தமது கட்சிச் செல்வாக்கை முன்வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பிழையான வழிகளில் நடந்திட கோவிலை ஒரு இடமாகக்கண்டு கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற போர்வையில ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில குருக்கள் ஒருவர் பல இளைஞர்களையும் தம் இச்சைப்படி நடந்திட வழிவகுத்து பெண்போகம் மது உண்டல் முதலிய பாதகச்செயல்களை அங்குள்ள இளைஞர்கள் செய்ய அவர்களுக்கு உணவும் கொடுத்து (இராப்போசனமும் கொடுத்து) அவர்களைக் கொண்டு அக்கோவிலில் தமிழரது பண்புகள் அமைதி ஒழுக்கம் முதலிய சிறப்புக்கள் நிகழாத வண்ணம் ஒலிபெருக்கி, சண்டை சச்சரவு அடிபிடி கருத்துவேற்றுமை இனப்பிரிவு தன்போக்கிற்கு இணங்காத நீதியுடன் வாழ முற்படுவாரை கொலை செய்ய சதித்திட்டம அவர்கள் வீடுகளுக்கு கல் எறி நடுச்சாமத்தில் காரில் வந்து தன் போக்கிற்கு இணங்காதவருடைய இல்லத்து சிறு குழந்தைகளை வெருட்டுதல் பெண்ணை தூடணமாகப் பேசச்செய்தல் அத்தனையையும் செய் க்கிறார்.

தான் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினரின் கையாள் என்கின்றார். ஓர் நீதியரசர் தன்கையில் உள்ளார். தான் எது செய்தாலும் கேட்கமுடியாது என்கின்றார். தனக்கு எதிராக யார் முறைப்பாடு செய்தாலும் பொலிஸில் வெற்றி பெறுவேன்; அதெல்லாம் நான சரிக்கட்டிக்கொள்வேன் என்கின்றார். அவர் நம்மை பல மொட்டைக்கடிதமூலம் அச்சுறுத்தியுள்ளார். இது இராட்சதச்செயலன்றி வேறோ?

ஆகையால் சைவ இளைஞர்களே நீங்கள் தயவு செய்து எம்சைவப் பெருமக்களாகும் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் சுந்தரர் பெருமான் முதல் நாயன்மார் சொல்லிய அறங்களை எம் கோயில்களில் நிலவ ஆவன செய்யவேண்டும்.

இஸ்லாம் மக்கள் நபிகள் நாயகத்தின் கட்டளைகளை வழுவாமல் பேணுகின்றனர். கிறிஸ்தவ மக்கள் இயேசு பெருமானின் போதனைகளை பேணுகின்றனர். புத்தர்களும் அப்படி ஆனால் இவர்களில் இன்று சிலர் தம் குருமார் சொல்லிய அறங்களை உணராது வழி தவறி நடந்து ஒலிபெருக்கி முதலியன தத்தம் தொழுகை இடங்களில் பாவித்தலை நாம் ஒரு செயலாக நினைந்து அவர்கள் ஒலிபெருக்கி பாவிக்கவில்லையோ? நாம் ஏன் பாவிக்கக்கூடாது என நீங்கள் வாதிடலாம்.

ஆனால் அவர்கள் பிழைவிட்டால் நாமும் அவர்வழியில் போதல் முறையன்று. எமது கோயில்களில் கருங்கல்லிலும் செம்பிலும் தான் கடவுள் உருவம் செய்யப்படுவன. இதுவன்றி பொன் வெள்ளி மூவற்றாலும் செய்யப்பெறுவன. இத்தன்மையை நீங்கள் சற்று உணரவேண்டும்.

இன்றுள்ள எல்லா இளைஞருக்கும் தெரியும் காந்தம் உலோகப்பொருள்களால் ஆகிய கம்பிமூலம் செலுத்தப்படுகின்றது. இந்தக்காந்தம் அக்கம்பி மூலம் செலுத்தப்படும் பொழுது அவற்றைத்தீண்டினால் மரணம் வரும்.

ஆனால் மந்திரங்களில் உயிர் சத்து உண்டு. அதனால காந்தத்தைப்போல் மரணத்தை வருவியாது பிராணனை வலுவடையச்செய்து காவல் செய்கிறது.

உதாரணமாக ஒருவர் நோய்உற்றபொழுது திருநீற்றில் மந்தர உரு ஏற்றி அத்திருநீற்றை ஒருவர்மேனியில் போட்டால் அந்நிலையில்நோய் நீங்குகிறது. பிராணன் வலுப்பெறுகிறது. இந்த தத்துவத்தை சைவ இளைஞர்களாகிய நீங்கள் நன் குணர வேண்டும்.

திருஞானசம்பந்தர் வெப்பு நோயால் மரணத்தறுவாயில் இருந்த கூன்பாண்டியனை திருநீறு இடுத்து மந்திரம் போன்ற தேவாரப்பதிகம் ஓதி வந்து வெப்புநோயை மாற்றினார். இதன் தன்மையை நீங்கள் உணரவேண்டும்.

அவர் திருநீற்றை கையிலெடுத்து ஓதிய பதிகத்தின் முதல்அடி ''மந்திரமாவது நீறு''. ஆகவே மந்திரத்திற்கும் திருநீற்றிற்கும் தொடர்பு உண்டு. இவை இரண்டும் இணைந்த போது மக்களுக்கு நலனைச்செய்கிறது. ஆகவே மந்திரம் நற்பலனை பிராணவலியைக்கொடுத்து நோயை நீக்குமானால் அல்லது பாதுகாப்பை தருமானால் இந்த மந்திரத்தை காந்தத்தின் மூலம் ஓதினால அந்த மந்திரத்தின் நிலை என்ன? அது பாதுகாப்பை விளைவிக்குமா? மின்காந்தம் தானே ஒலியைப்பெருக்குகின்றது. மின்காந்தம் இல்லாதவழி ஒலியைப் பெருக்கமுடியுமா? ஆதலினாலே மின்காந்தத்துடன் ஒலிபெருக்கப்பட்ட எந்த மந்திரமும் மரணத்திற்கு ஏதுவாக அமையுமேயன்றி நற்பயனுக்கு ஏதுவாகாது.

உதாரணமாக மின்காந்தத்தில் ஒலிபெருக்கியில் மந்திரம் ஓதிப்பாருங்கள் அதைக் கேட்டுக்கொண்டு நோயுற்று இருப்பவர் பலரும் அந்த நோய்கூடப் பெறுவர்; அடுத்து நோயில்லாதவரும் நோய்வாய்ப்படுவர் அல்லது நோயுற்றாலும் பல நாள் இப்பூமியில் இருக்கக்கூடியவர் சிலநாளில் இறப்பர்.

இதன் தாற்பரியங்களை விஞ்ஞான ரீதியில் எல்லாவற்றையும், விளங்கிக்கொள்ளும் ஆற்றலுடைய இளம் சந்ததியினர் நன்குதெளிய வேண்டும்.

இன்னொரு உதாரணம் காட்டுகிறோம். கோயில்களிலே வேதமந்திரங்களை சுலோகங்களை ஓதிவிட்டு ஓம் சாந்தி சாந்தி சாந்தி என மும்முறை ஓதுகிறார்கள் ஐயர்கள். இதன் காரணம் என்ன? ஐயர் கோயிலில் இருக்கவேண்டிய அமைதியை தனது சுலோகம் ஓதுதலாலே நீக்கிவிட்டேன் பழமைபோல சாந்தி நிலவட்டும் என்பதே உட்கருத்து.

இப்படி வாயால்ஓதிய சத்தம் கோயில் அமைதியைக் குழப்புகின்றதற்காக மும்முறை சாந்திசொன்னால் அடுத்து ஒலிபெருக்கியால் எழும் அமைதியின்மை எத்துணை பொல்லாதது என நீங்கள் நினையுங்கள்.

ஆதலினாலே ஒலிபெருக்கிப் பாவனை எல்லாவழியாலும் தீங்கு பயப்பது என்பதை நன்கு நீங்கள் உணரவேண்டும்.

இன்று இந்த ஒலிபெருக்கியில் மந்திரம் சொல்லும் பிராமணருடைய வாழ்க்கையை அல்லது நடத்தையைக் காணுங்கள். இவரில் எல்லோருமே இரகசியமாகவோ அல்லது பரகசியமாகவோ மது அருந்துகிறார்கள். மது என்றால் சாதாரணமான கள்ளு அல்ல. சாரயம் விறண்டி விஸ்க்கி போன்ற உயர்ந்தரக குடிவகை பாவிக்கின்றார்.

அடுத்து இவர் குடும்பங்களின் நடத்தை மிக மிக மோசம். சாதாரணமாக கோயிலில் உட்புகமுடியாத நிலையில் வெளியே நிற்கும் மக்களிடத்து அவர்களுடைய பெண்களிடத்து கற்புடமையைக் காணலாம். ஆனால் ஒலிபெருக்கியில் மந்திரம் ஓதும் பிராமணருடைய குடும்பப் பெண்களில் கற்பு என்றால் அது அந்தக்காலம் இப்ப அது பார்க்க முடியாது. அது பதினைலாம் நூற்றாண்டு இப்போ இருபதாம் நூற்றாண்டு என்ற அளவிற்கு நடத்தை வந்துளது.

ஆகவே தீபநடத்தையால் துணிவுற்ற பிராமணர்களும் பிராமணப் பெண்களும் கோயிலில் ஒலிபெருக்கிப் பாவனையை விரும்புகிறார்கள். ஆதலினாலே தீபநடத்தையை பிராமண சமூகத்திடத்து பெருகிவருவதற்கு ஒலிபெருக்கியும் ஓர் பாவகாரியாக வந்துளது என்பதை எமது சைவ இளைஞர் தெளியவேண்டும்.

இவையாவும் இராட்சதச் செயல்கள். மனிதருடைய நல்வாழ்வை உயர்வை கெடுத்திடும் செயல்கள். இவற்றைநீக்கி எமது சைவநெறிகளை மேலோங்கச் செய்யவேண்டின் அந்த ஒரு செயல் உங்களது நல்லுணர்வாலும் நல்நடத்தையாலுமே கைகூடும்.

இன்று நமது நாயன்மார் எமக்கு போதிக்கும் அறங்களை மிக உறுதியுடன் எடுத்துக்காட்டல் எமது பணியாகிறது. இளைஞராகிய உங்கள் சிந்தை களியாட்ட மனப்பாங்கில் இழுபட்டுப்போய் அதனாலே சிவதர்மம் கெட்டுப்போவதையும் தமிழ் மக்களுடைய அறம், சத்தியம் அழிந்துபோவதையும் நாம் நல்ல ஆதாரத்துடன் உங்கட்கு எடுத்துக்காட்டியுள்ளோம். ஆகவே தமிழாது நற்பண்பாட்டையும் எம பெரியோர் கையாண்ட உண்மை அறங்களையும் பேணிக்காத்து வழுவாமல் ஒழுகி உங்கள் பின்னால் வரப்போகின்ற இளம் சந்ததியினருக்கு வழிகாட்டியாக நீங்கள் இனி அமைந்து கொள்வீர் என்பதை சந்திரதீபம் எதிர்பார்த்து நிற்கிறது.

நமது நல்லொழுக்கமும் தூய நடத்தையுமே நம் கோயிலில் தவமாகமாறி எம்மை அடிமைப்படுத்தும் இராட்சதகுணங்களை நீக்கி எம் தமிழினமும் உலகிலுள்ள எல்லா இனங்களையும் போன்று சுதந்திரமுடன் வாழவழிவகுக்கும் என்பதை நன்கு நீங்கள் உணரும்படி சந்திரதீபம் தன்னாலான பணியை புரிகிறது.

வாழ்க தமிழினம்!

வாழ்க சைவநீதி!

# மனிதருடைய இராட்சதகுணத்தைத் தெரிவிக்கும் திருப்பதிகம்

## திருஇராமேச்சுரம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

**பாசமும் கழிக்க கில்லா அரக்கரைப் படுத்துத் தக்க**
**வாசமிக் கலர்கள் கொண்டு மதியினுல் மால்செய் கோயில்**
**நேசமிக் கன்பி னுலே நினைமின்நீர் நின்று நாளுந்**
**தேசமிக் கான்இ ருந்த திருஇரா மேச்சு ரமே.**

பாசங்களை கழித்திட முடியாத இராட்சதரைக் கொன்று அழித்த திருமால் (இராமர்) தகுதியான வாசனையுடைய பூக்களை எடுத்துக்கொண்டு நல்ல புத்தியினாலே செய்திட்ட கோயிலான இதனை நேசம் மிகுந்த அன்பினாலே நீவிர் நினையுங்கள். வேறுவழி மனதைப்போக்காது நின்று நாளும் நினையுங்கள். இத்தேசங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாலான சிவன் இருந்த திருஇராமேசுரம் அதுவாகும்.

உணவு உடை பெண்போகம் வாகனம் முதல் பலவும் பாசங்களாவன. இதை ஒவ்வொன்றாக நீக்குதல் அறிவாளியின் கடன். அதை நீக்காதவர் பின்னர் மரணத்திற்கே வித்தாகிறார். அவர்கட்கு அழிவு ஏற்படுவது இயல்பு. இதை உணர்த்துவதற்காக இராட்சதர் பாசத்தைக் கழித்திட முடியாதவர் என்றுகூறுகிறார்.

அருமந்த பிறவியில் பாசமான பற்றை நீக்க வழியறியாதவனை புத்திசாலியென நாம் சொல்ல முடியாது. பாருங்கள் கொடிய இராட்சதர்களை இராமர் அழித்துவிட்டு வெற்றி கொண்டாடவில்லை. பதில் உடன்சென்று ஓர் கோயில் செய்து வாசம் மிகுந்த தகுதியுடைய பூக்கள்கொண்டு நித்தலும் வழிபட்டார். இதனை மதியினால் மால் செய் கோயில் என்றார்.

திருமால் கோயில் செய்து திருவிழாச்செய்து மகிழவில்லை. வாகனம் செய்யவில்லை. ஆனால் வாசமுடைய தகுதியான பூக்களைமட்டும் எடுத்து பூசனை புரிந்தார் எனப்படுகிறது.

இதனை கோயிலில் ஒலிபெருக்கி பிடித்து கொண்டாடுவார் உணரப்போறாரோ? அல்லது பிரசங்கம் திருவிழா பாட்டுக்கச்சேரி மேளக்கச்சேரி வைப்போர் உணரப்போகின்றாரோ? கோயிலை வழிபடற்காகப் பாவிப்பவனே உண்மையான புத்திசாலி. மதியினால் மால்செய் கோயில் என்பது அதுவேயாகும்.

**முற்றின நாள்கள் என்று முடிப்பதே காரண மாய்**
**உற்றவன் போர்க ளாலே உணர்விலா அரக்கர் தம்மைச்**

# கந்தசுவாமியார் இரண்டு கலியாணம் முடித்தால நீங்கள் சும்மா இருப்பியளோ என்றார் யோகசுவாமி

யோகசுவாமியைச் சென்று தரிசித்த நேரம் என்னை அவர் நோக்கி உமக்குக் காணும் எத்தனை பிள்ளைகள் என்று ஒரு நாள் கேட்டார். நான் சுவாமி ஐந்து பிள்ளைகள் என்று சொன்னேன். இப்ப உனக்கு எத்தனைவயது எனக் கேட்டார். நான் 42 என்றேன். இன்னும் இந்த றேட்டில் போனால் நாலைஞ்சு பெறுவாய் என்றார். நான்பேசாது நின்றேன். இவ்வளவு பிள்ளைகளையும் பெற்றுவிட்டு இவர் என்னிடம் வாறார். எப்படி இருக்குக்காணும் என்று அயலில் நின்ற இன்னொருவரைப் பார்த்துச் சொல்லி கண்ணைச் சிமிட்டி தலையை அசைத்தார். பின்னர் சொன்னார் உங்களை உங்கள் சமயம்தான் பழுதாக்குது. கந்தசாமியார் இரண்டு கலியாணம் முடித்தார். அப்ப நீ இன்னுமொரு கலியாணம் முடி. முடித்தால் அதற்கும் ஐஞ்சாறு பிறக்கும் பிறந்தபின் உனக்கு ஊரிப்பட்ட பிள்ளையள் நல்ல சோக்கு என்றார்.

என்றுவிட்டு உனக்கு என்ன சம்பளம் என்றார்: அலவன்ஸ்சுடன் 200ரூபாய் வருமென்றேன். அப்படி என்றால் என்னென்று நீ குடும்பம் நடத்துவாய் எனக்கேட்டார். பத்தாதேகாக என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செற்றமால் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தைப் பற்றிநீ பரவு நெஞ்சே படர்சடை ஈசன் பாலே.

இராட்சதருடைய கொடுமை விளைக்கும் காலம் முடிந்தன என்று அக்கொடிய இராட்சதர்களை முடிவுசெய்தல் முறையாகும் அதுவன்றி தருமமும் ஆகும் என்றது காரணமாக அதற்குற்ற வன்மை மிகுந்த போர்களால் நல்லுணர்வு ஏதும் இலாத இராட்சதர்களை அழித்த திருமால் (இராமர்) செய்தகோயில் திரு இராமேச்சுரத்தை என்நெஞ்சமே நீ பற்றிநின்று போற்றிடுவாயாக; அங்குறையும் படர்ந்த சடையுடைய ஈசன்பாலாக உன் எண்ணமியாவும் சேர்ந்துகொள்ளட்டும்.

இராட்சதர் நல்லுணர்வு இல்லாதவர். கொடுமை தம் உள்ளத்தில் தங்கப்பெற்றவர். அவரால் உயிர்கள் கொடுமையை அனுபவிக்கும் காலஎல்லையும் ஒன்று உண்டு.

இங்கு முற்றின நாள்கள் என்றது இராட்சதர் செய்யும் கொடுமை முதிர்ந்தன என்பது கருத்து. கூடிவிட்டது என்பதே காரணமாகியது.

உலக சிருட்டியில் கொடுமை செய்யும் தீயவர் பிறக்கத்தான் செய்கிறார்கள் என்றாலும் அவர்கள் செய்யும் கொடுமை எல்லைகடந்தால் திருவருள் ஒரு அவகாரத்தை இங்கு அனுப்பிவிடும். அவர்மூலயாக தீமை செய்வோர் கொன்றழிக்கப்படுவர். கொடுமை செய்வாரைக் கொன்று அழிப்பது ஓர் தர்மமாகும். கொடுமையை அகற்றுவது நீதியுடையது. எனவே முடிப்பது சாரணமாக என்றார்.

கொடுமையை செய்வாரை இலேசான போர்களால் அழித்திட முடியாது. கொடிய போர்களை செய்யவேண்டும். அதுவுமன்றி கொடியரை அழித்திடற்கு ஓர் பலவித உபாயத்தன்மையான போர் உண்டு. அதனால் உற்றவன் போர்களால் என்கிறார்:

இராமபிரான் இராவணனுடன் செய்து கொண்டபோரில் எத்தனையோ நன்நெறியுடன் கூடிய குரங்குத் தலைவர்களையே தமக்கு உதவியாகப் பெற்றார். சுக்கிரீவன் சாம்பவன் அனுமான் நீலன் முதலியோர் சூரியனுடைய புத்திரர் எனப்பட்டவர். போரில் உதவியாக நின்றவர். இவர்கள் யாவரும் ஒளியுடையவர். தவத்தின் வலியுடையவர். அனுமான் தூய பிரமச்சாரிய விரதமுடையவர். வலிமை பிரமச்சாரியத்தில் மட்டும் உண்டு. இராட்சதர்களுடைய குணங்களில் பெண்போகம் பொல்லாததாக இருக்கக் காணலாம். எல்லாத் தீங்கிலும் பிறன் மனை நயத்தல் பொல்லாதது.

வாலி சுக்கிரீவனுடைய மனைவியை வலிந்து பெற்றுக்கொண்டவன். வாலி சிவபத்தனாகிலும் இந்த அழுக்கால் பீடிக்கபபட்டவன். அதனால் வாலிவதம் முதற்கண் செய்யப்பட்டது. அது தனக்கு துணையாகும் குரங்குப்படையை தூய்மை செய்யவாகும்.

## கடலிடை மலைகள் தம்மால் அடைத்துமால் கருமம் முற்றித் திடலிடைச் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தைத் தொடலிடை வைத்து நாவிற் சுழல்கின்றேன் தூய்மையின்றி உடலிடை நின்றும் பேரா ஐவர்ஆட்டுண்டு நானே.

கடலிடத்தாக வழிப்போகவேண்டி அதற்கு வழிதேடும் முகமாக பெருமலைகளால் கடலை அடைத்து வழிசெல்லும் பாதையாக்கி அதனிடமாகச்சென்று இராவணனைக் கொன்று இராட்சதரை அழித்து சீதையைமீட்டு தனது கருமத்தை முடித்து திரும்ப அதே வழியாகத் திரும்பிவந்து மேல் திடலான கடற்கரையில் செய்தகோயில் திரு இராமேச்சரத்தை நான் பாடலின் தொடுப்பின் இடையாக வைத்து என் நாவால்பாடி தூய்மையிலாத நிலையில் சுழல்கின்றேன் என்னகாரணமோ எனின் என்னிடத்து நின்றும் விட்டு நீங்காத கண், காது, மூக்கு, வாய், உடலம் என்னும் புலன்கள் ஐந்தாலும் நான் ஆட்டுணணப்படலால்.

கடல் இடத்தாகவே இராமர் இலங்கை சென்றார். அதற்கு வழியாக்கவே அனுமான், சுக்கிரிவன், சாம்பவன், நீலன் முதலிய குரங்குத்தலைவர்களை உதவி நாடி அவர்களால் கடலை மலைகளால் அடைத்து திடல் செய்தார். அந்தவழியால் சென்று சீதையைக் களவாண்டு சென்று வைத்திருந்த இராவணனைக் கொன்றார். சிதையை மீட்டுத் திருப்பி வரும் போது முன்னர் பாதை செய்ய திடலாக அமைந்த கடற்கரையில் கோயில் செய்தார். இதுவே இராமேச்சரம் என்னும் மிகவும் புனிதமான கோயில்.

இங்கு அம்பாள் மலைவளர் காதலி என்னும் நாமமுடன் விளங்குகின்றாள். அருளால் சிறந்த தலம். மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் இயல்பாக அமைந்த கோயில்.

இதன் புனிதப்பெருக்கத்தை தன் மனதில் உணர்ந்த திருநாவுக்கரசர் பெருமான் தான் இத்தலத்தை எவ்வாறு பாடுவேன் என்னும் காரணத்தால் தொடலிடைவைத்து. நாவில் சுழல்கின்றேன் தூய்மையின்றி என்றார்,

எல்லாப் பழியிலும் பொல்லாதது கொலைப் பழி. இந்தப்பழி நீங்குவது தூயசிவவழிபாட்டால் அன்றி வேறுவகை இன்மையால் திடலிடைச் செய்த கோயில் என்கிறார்: கொலை கோபம் முதல் பலபழிகளும் நீங்கத் திருமால் இராமர் செய்த கோயில் வழிபாடு ஞானநெறிக்கே உரித்தாகியது ஆனதினால் தூய்மை இல்லாதவழி எவ்வாறு பாடலாம் என்பது குறிப்பு.

ஞானத்திற்கு தூய்மை இன்மையை வருவிப்பது புலன்களின் சேட்டைகள். கண் காது மூக்கு நாக்கு உடம்பு என்னும் இவைகள் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற இவற்றால் மனத்தை அழுக்குப் படுத்துவன, எமது மனம் சுவைக்கும் காட்சிக்கும் இனிய ஓயாது அங்கலாய்ப்பது. இதனை விரும்புதல் அழுக்காகும், மனத்தூய்மையிலாததாகும்.

## குன்றுபோல் தோளு டைய குணமிலா அரக்கர் தம்மைக் கொன்றுபோ ராழி யம்மால் வேட்கையாற் செய்த கோயில் நன்றுபோல் நெஞ்ச மேநீ நன்மையை அறிதி யாயில் சென்றுநீ தொழுதுய் கண்டாய் திருஇரா மேச்சு ரமே.

மலைபோல் தோள்கள் உடைய குணம் ஏதும் இல்லாத இரட்சதர்களை கொன்று போர்புரியும் சக்கரப் படையுடைய அத்திருமால் (இராமர்) தம் உள்ளத்து உற்ற ஆர்வமிகுதியால் செய்த கோவில் இராமேசுரம் அதனை நன்று போல நினைந்து நெஞ்சமே நீ நன்மையை அறிதி என்றால் அந்த நன்மையால் நீ சென்று எம்பெருமானைத் தொழுது உய்ந்து கொள்வாயாக.

இராட்சதர் மாமிசம் உண்பவர்: மிகு பலம் படைத்தவர் ஆதலால் அவர்கள் தோள் மலைபோல் நின்றன.

இராட்சதர் என்பது மனிதரிடத்துள்ள தீய குணங்களைக் காண்பிப்பது. தீமை எப்பொழுதும் மலைபோல் பருத்தது. ஆனால் புண்ணியம் பூவைப் போல் சிறுத்தது.

தீமை மலைபோல எதற்கும் அஞ்சாது; பூ தீண்ட கசங்கி தன்னலம் கெட்டு அழிந்துவிடும். இதனாலே குன்றுபோல் தோளுடைய இராட்சதர் எனக்குறிப்பிட்டார். இதனால் அவர்கள் குணமிலார் எனக் கூறப்பட்டது.

கொடிய இராட்சதரைக் கொன்று திருமால் தனது வெற்றியின் விளைவை எண்ணிப் பெருமிதமடையாது அந்த நிலையில் தனது வெற்றிக்குக் காரணமாகிய கடவுளை நினைந்து திருமால் செய்த கோயில் திரு இராமேச்சரத்தை வேட்கையாற் செய்த கோயில் என்கின்றார். வேட்கை என்பது தாகம்; தாகம் சிவன் அருள் பெறுவதாக இருந்ததே ஒழிய வேறு எந்நிலையான தாகமும் அவருக்கில்லை.

போர்ஆழி அம்மால் என்பது சக்கரைப்படை போருக்குரிய ஆயுதம். அது சிவனாலே கொடுக்கப்பட்டது. இராட்சத குணங்களை அசுர குணங்களை அழிப்பதற்கே சக்கரப்படை உதவியது. இதனைச் சிவனே முன்னர் உண்டாக்கினவர். சலந்தரன் என்னும் அசுரனுடைய வரலாறு காண்க. இக்கோயிலை நன்று போல் நெஞ்சமே நீ நன்மையை அறிதியாதில் என்றது, கொலை செய்தவர் பழிதீரக்கட்டிய கட்டிய கோயில் அல்ல. சிவனைவழிபடும் தாகத்தால் என்றதை குறிப்பிடுகிறார். கடவுளை வணங்கும் போது அல்லது கடவுளுக்கு கோயில் செய்யும்பொழுது நன்மைமை உணர்ந்து செய்யவேண்டும். பழிதீர பாவம்தீர கோயில்கட்டுவது முறையன்று. இன்றுள்ள பணம்படைத்த பல வியாபாரிகள் தங்கள் பிழையான வழியில்

அதற்கு நான் பேசாது மௌனமாய் நின்றேன். சர் நீ என்னத்தைதாலும் செய் உன்னை நான் இனி ஏசக்கூடாது ஏனென்றால் உனக்கு 5 பிள்ளையள் என்று சொன்னபடியால் அவங்களும நீயும் சேர்ந்து என்னோடு சண்டைக்கு வருவியள் நான் இனி உனக்கு பயப்படத்தான் வேண்டும் என்றார். நான் பேசாமல் நின்றேன். சரி வாரும் என்றார். நான் மனதால் வணங்கிக் கொண்டு பெரும் திகைப்புடன் வீடு திரும்பினேன்.

## திருமணத்தின் பேறு புத்திரபாக்கியம்

### ஆனால் அளவுடன் நன்று என்றார் யோகசுவாமி

ஒருநாள் யோகசுவாமியிடம் சென்றநேரம் எனது வேலைபற்றி விசாரித்து நீ ஒழுங்காய் வேலைசெய்கிறாய் இவ்வேலைப்போல் என்றார். பின்னர் பிள்ளைகளைப்பற்றி விசாரித்தார். அப்பொழுது பிள்ளைகளின் சுகயீனத்தால் கவலைப்பட்டிருந்த காலம. அதனை உணர்ந்து பிள்ளைகளின் சுகயீனத்தால் வாட்டமடைகிறாய். பல பிள்ளைகளைப் பெற்றதால் போற்றுதற்கு வகையறியாமல் தடுமாறுகிறாய். திருமணம் செய்தால் புத்திரபாக்கியம்தான் உயர்ந்த பேறு, ஆனால் அது அளவோடு இருக்கவேண்டும். உன் மனைவியைப் பிள்ளைப்பொருட்டாலன்றி வேறுவகையில் சும்மாபோய் தொந்தரவு செய்யக்கூடாது.

ஒருவருக்கு இரண்டு அல்லது மூன்று பிள்ளை காணும. அதற்குமேல் கூடிப்போம். அந்தவகை 5, 6, 8, 10 என்று பெற்றால் பிள்ளைகளை முதல் நல்ல பழக்கம் பழக்கமுடியாது, எல்லாம் நல்ல குணமுடையதாய் வராது. பழுதாய்ப்போம்.

ஏன் உங்கடை சைவத்தில் அளவோடு பிள்ளைகளைப்பெறச் சொல்லவில்லையோ? எனக் கேட்டார். அது தெரியாததால் மௌனமாய் நின்றேன். உடனே பட்டினத்தாருடைய பாடல் "நாப்பிழக்கப் பொய்உரைத்து நாட்டில் பொருள் தேடி நாரியரைக் கூடி... புற்றீசல்போல் புகல்வர்களைப் பெறுவீர்... போற்றுதற்கும் வகையறியீர்" என்ற பாட்டைப்பாடினார். பெண்களைக் கண்டபடி கூடினால் நீ கெட்டு நொந்து போவாய், அதுதான் நோய்க்குக் காரணமாகும் என்ற பொருள் தோன்றப் பேசினார்.

அப்பொழுது சைவத்தில் அளவுடன் பிள்ளை பெறு என்று எங்கே சொல்லியிருக்கு என்ற நினைப்புடன் எனது இல்லம் சேர்ந்தேன், பலகாலமாக இது விளங்கவில்லை. பின்னர் கந்தபுராணத்திற்கு உரை எழுதும்போதுதான் தெளிவுபெற்றேன்.

மார்க்கண்டேயப் படலத்தில் குச்சகமுனிவர் தன் மகன் கவுச்சிகமுனிவருக்கு திருமணம் செய்வது புத்திரனைப் பெறும்பொருட்டாகும். அதுவன்றிக காம இச்சைக்காகத் திருமணம் செய்யக்கூடாது.

காமம் என்பது பொல்லாத நோய். அதைக் கட்டுப்படுத்தினாலன்றி நன்மைபெற முடியாது என்றும் உனக்கு ஒருபிள்ளை காணும் என்றும் அதனை வளர்த்து அது தன்னைத்தான் பேணிக கொள்ளும் காலத்தில் பின்னர் நீயும் மனைவியும் பிள்ளையை விடுத்து மீண்டும் குடும்பப் பாசத்தில் பாசம் கொள்ளாது அதைவிடுத்துத் தவநெறுசார்தல் நலமென்றும் சொன்ன வாக்கியங்கள் ஞாபகத்தில் வந்தன,

குடும்பத்தில் அளவுடன் பிள்ளை பெறுதல் சைவ நெறியில் வேதகாலத்திலிருந்து வந்தது. அது ஒரு புனிதமான செயல்.

ஆனால் இன்றைய குடும்பக்கட்டுப்பாட்டுக்காரர் சொலவதுபோல் குளிகை சத்திரசிகிச்சை முதலியன மூலம் பிள்ளைப்பெறுதலைக் கட்டுப்படுத்தல் மிகவும் பழுதான காரியம,

குளிகை பாவித்துப் பெண்ணுடன் உடலுறவு வைத்துப் பிள்ளைமட்டும் இல்லாமல்போக வழி செய்தல் மிகுபாவம் என்பதை நம் சைவமக்கள் நன்றாக உணரவேண்டும்;

கொடியேற்றம்செய்யக் குருக்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பல பெண்களைக் கலியாணம் செய்தல் மிகு பாதகமான செயல். உண்மையான பிராமணன் 48 வயதின்பின் பெண்போகம் அறவே நீக்கிவிடுவான்.

சிதம்பரத்தில் கொடிக்கவி பாடிக் கொடி ஏற்றிய உமாபதிசிவம் ஓர் தூய பிரமச்சாரி என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும்.

கொடியேற்றி இருக்கும் காலத்தில் குருக்கள் குடும்பக் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும், ஆனால் இன்று கொடியேற்றும் காலத்தில் தன் மனைவிமட்டுமல்லாது பிற பெண்ணையும் தீண்டும் வாய்ப்புடைய பல குருக்கள்மாரை எங்கள் இலங்கைநாட்டில் காணலாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக்கொண்ட பணத்தில் சில பகுதியை கோயில் கட்டக் கொடுப்பது பிழையான வழியில் தேடிய பழி தங்களை பீடிக்காது இருக்கும் என்றதாகும். இன்று நம் இலங்கைநகரில பல சைவக் கோயில் எல்லாம் ஊழியரை வருத்தி பொருள் தேடிப் பெருஞ்செல்வந்தரான அபின், ஆடை, வைன், கஞ்சா, பீடி, சுருட்டு, சோடா: சவுக்காரம், கள்ளக்கடத்தல், யந்திரசாதனங்கள் கொள்ளை இலாபத்தில்விற்ற அரிசி, சீனி, மா, பயறு உழுந்து முதலிய பணமும் அழுகிய பொருட்களை நல்லதென விற்பனைசெய்து ஏமாற்றிய பணமும், உழுந்து, மல்லி, சர்க்கரை பயறு இவற்றில் மண்சேர்த்துப் பெற்ற பணமும் அருவட்டிக்குப் பெற்ற பணமும் நோயாளிகளிடமிருந்து அதிகப்படி வாங்கிய பணமும் அரசாங்கத்தை ஏமாற்றி லேவுப்போட்ட பணமும் கட்டிடம் கட்டிய பணமும், கைம்பெண்களை ஏமாற்றிய பணமும் இவைகொண்டு கட்டிய கோயில் அவைதான் பழியுடையன,

பழி உடைய பணத்தில் கட்டிய கோயிலை மதியாதீர் என்றதால் நன்மையை அறிதியாயில் என்று சொல்கிறார். இதில் கோயிலைக் கட்டியவரது கொள்கையும் குணமும் தெரியும்படி மொழிவதால் நன்மை எனப்பட்டது. தொழுதுய் என்றது புனிதமான கோயிலைத் தொழுது உய்தலே காரணமாகும்.

## வீரமிக் கெயிறு காட்டி விண்ணுற நீண்ட ரக்கன்
## கூரமிக் கவனைச் சென்று கொன்றுடன் கடற்ப டுத்துத்
## தீரமிக் கான்இ ருந்த திருஇரா மேச்சு ரத்தைக்
## கோரமிக் கார்த வத்தாற் கூடுவார் குறிப்பு ளாரே.

வீரம் மிகுந்த பற்களைக் காட்டி வானளவும் நீண்ட இராட்சதனை கொடுமை நிறைந்த இராவணனை அவன் இருந்த இலங்கை சென்று அவனைக் கொன்று அவன் உடலை உடனே கடலில் போட்டு அதன் செயலால் தீவிரம் (வீரம்) மிகுந்த இராமபிரான் இருந்து வழிபட்ட திரு இராமேச்சரத்தை விடாது பற்றும் கொடுமை மிகுந்த தவத்தால் கூடிக்கொள்வார்கள் நல்ல குறிப்புடையார்கள்.

கோரம் மிக்க தவம் என்பது மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூன்று ஆசைகளையும் வென்று உண்மை நிலையில் நின்று தவத்தைச் செய்வாரைக் குறிக்கும். இந்த மூன்று ஆசைகளும் தற்காலிகமாகச் சுகங்களைத் தருவன, வாழ்க்கையில் இவையைவிட்டு நீங்கி இருப்பவர் உம் சித்தத்தில் கொடுமை உடையது என்பதை அனுபவத்தில் திடமாக நம்புங்கள். தவம் செய்வது பெரியோருடைய குறிக்கோள் ஆகும், கொடியவரை அழித்தால் ஒருவனுக்கு வலிமை பிறக்கும். அதனாலே தீரம் மிக்கார் என்றார். முன்பு இருந்தநிலையிலும் பார்க்க இராமருக்கு இராவண சங்காரத்தின் பின் அருள்நிலைகூட என்பது குறிப்பு. கூரமிக்க இராவணன் என்றது, கொடுமை மிக்கவன் என்பது பொருளாகும்,

திருமூலரும் இதே கருத்தைத் தெரிவிப்பாராய் பிழைவிடும் பிராமணரைத் தண்டித்துத் திருந்த வைத்தல் ஒருவர்க்குப் பெரும் ஆன்மபலத்தைத் தரும் என்று கூறுகின்றார். இதையும் இங்கு நோக்குக,

## ஆர்வலர் நம்மின் மிக்கார் என்றஅவ் வரக்கர் கூடிப்
## போர்வலஞ் செய்து மிக்குப் பொருதவர் தம்மை வீட்டித்
## தேர்வலஞ் செற்ற மால்செய் திருஇரா மேச்சு ரத்தைச்
## சேர்மட நெஞ்ச மேநீ செஞ்சடை எந்தை பாலே.

எம்மிலும் பார்க்க மிகுந்த வலிமை உடையவர் யார் என்று கூறித் தங்கள் பிழையான செயலில் மிகுந்து தங்களைக் கேட்க யாராலும் முடியாது என்ற இறுமாப்புடைய இராட்சதர்கூடிப் போரையும் கொலையையும் தங்களுக்கு வாய்ப்பாகச்செய்து மிகுத்து இருந்து தம்முடன்வந்து போர்செய்த இராட்சதர்கள் எல்லாரையும் அழித்துக்கொன்று அவர்கள் ஊர்ந்த தேரின் வலிமையை அழித்த இராமர்செய்த திருஇராமேச்சரத்தை என் மட நெஞ்சமே சேர்ந்துகொள். சிவந்த சடையுடைய சிவன்பால் சேர்ந்துகொள்.

தட்டிக்கேட்க ஆளில்லாத இராட்சதரைக் கொன்ற இராமர்செய்த கோயில் என்று திரும்பவும் கோயில் செய்தாரின் ஆன்மபலம் பேசுகின்றார். கொடுமை அழித்தல் உலகில் நம்பத்தகாத காரியம். ஆதலினாலே இராட்சதரையும் இராட்சதர் ஊர்ந்த தேரையும் இங்கு குறிப்பிடுகின்றார். தேரின் வலிமை இலாது இராட்சதர் கொடுமைசெய்ய முடியாது. இயந்திரசாதனங்களே பலவும் கொடுமைக்கே வித்தாகின்றது. இன்று, ஒருசிறிய கார் அல்லது மோட்டார் சைக்கிள் வைத்திருப்பாருடைய குணத்தைப் பாருங்கள்: அவர்கள் யாவரும் கொடியவராகக் காணப்படுகின்றார்.

இராமர்செய்த கோயிலில் சிவன் இருக்கின்றார். மடநெஞ்சே வேறெண்ணாது இராமேஸ்வரம் கோயிலைத் தொழுதால் சிவனைப் பெறலாம் என்பது குறிப்பு.

## வாக்கினால் இன்பு ரைத்து வாழ்கிலார் தம்மை எல்லாம்
## போக்கினாற் புடைத்தவர்கள் உயிர்தனை யுண்டு மால்தான்
## தேக்குநீர் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தை
## நோக்கினால் வணங்கு வார்க்கு நோய்வினை நுணுகும் அன்றே.

தனது வாக்கால் இனியமொழிகூறி வாழமுடியாத இராட்சதர்களை எல்லாம் தான் அவர் இருப்பிடம்சென்று அடித்து அவர்கள் உயிரை நீக்கி இராமர் நீர்தேக்கும அணை அருகே செய்த கோயில் திருஇராமேச்சுரத்தை நோக்கினால் வணங்குவார்க்குக் கொடிய நோய்வினை நுணுகி அருகிப் போகும்.

இராட்சதர் வாயினால் ஒருபோதும் இன்பமான ஒரு வார்த்தையை அல்லது பிறர்க்கு நன்மை தரும் வார்த்தையைச் சொல்லார்கள். இன்பம் தரும் வார்த்தை என்பது இனிக்கப்பேசுதல் அன்று. அது இன்பநெறியைக் கைகூட்டிட வழிவகுக்கும் நல்வார்த்தையாகும். வஞ்சகர் இனிக்கப் பேசுவர். ஆனால் அவர் வார்த்தை இன்பமுடையதன்று பதில் துன்பமே விளைவிக்கும்.

ஆதலினால் வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார் என்றனர். அடுத்து இராட்சதர் உரக்கச் சத்தமிடுபவர். ஒலிபெருக்கியில் கதறுவதும் இராட்சதச் செயலாகும். ஆங்கிலத்தில் இராட்சதரை "மொன்ஸ்ரர்" என்ற பதத்தில் வைப்பார்கள். ஆனதினால் ஒலிபெருக்கி எந்த ஒரு கோவிலிற்கும் ஒரு இராட்சதச் செயல் என்பதை முதற்கண் நாம் கற்றவர் எனச் சொல்லும் பண்டிதர்கள் பண்டிதைகள் அரசியல் தலைவர்கள் பல்கலைக்கழக வேந்தர்கள் துணைவேந்தர்கள் பீடாதிபதிகளான சைவ மக்கள் உணரவேண்டும். அவர்கள் உணர்ந்தால் மற்றுப் பொதுமக்களும் உணர்வார்கள்.

சைவம் வளர்க்கிறேன் என இரவு முழுவதும் ஒலமிடும் யாழ்ப்பாணத்துச் சைவநெறியை பாழாக்கும் பெரும் இராட்சதனை சுவாமிநாதத்தம்பிரான் எனும் மணிஐயன் உணரவேண்டும். ஐயோ இந்த ஒரு பழிபிடித்த மணிஐயன் நன்னெறிப்பட்டால் பிறகு எல்லாரும் நல்ல நிலைக்கு வருவார்கள்.

தேக்குநீர் என்றது கடல்தேக்கிய மணல் மேடு என்பதாகும்.

## பலவுநாள் தீமை செய்து பார்த்தன்மேற் குழுமி வந்து
## கொலைவலார் கொடிய ராய அரக்கரைக் கொன்று வீழ்த்த
## சிலையினான் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தைத்
## தலையினால் வணங்கு வார்கள் தாழ்வராந் தவம தாமே.

பலவும் பலநாட்கள் தீமையினைச்செய்து இப்பூமியிடத்துக் கூட்டம் கூட்டமாகவந்து கொலைசெய்வதில் வல்லவராய அரக்கரைக் கொன்று வீழ்த்திய வில் ஏந்திய கரம் உடைய இராமர்செய்த கோயில்

# யாழ்ப்பாணத்தாரோடு கூடி விழுந்துபோனேன்
## என்றார் யோகசுவாமி

எனது குரு செல்லப்பாசுவாமிகள் என்னிடம் அன்று யாழ்ப்பாணத்தாரோடு கூடாதே. கூடினால் விழுத்திப்போடுவான் என்றார். நான் அவர் கூறியதை நினையாமல் யாழ்ப்பாணத்தாரோடு கூடி விழுந்துபோனேன்.

இவ்வாறு யோகசுவாமிகள், முன்னாள் தபால் அதிபராகக் கடமை ஆற்றிய திருநெல்வேலியில் இருந்த இராமலிங்கம் என்பவரிடம் கூறியதாக அவருடைய மகள் புவனேஸ்வரி அம்பலவாணர் ஆசிரியையாக கடமையாற்றி இளைப்பாறியிருக்கும் அம்மையார் ஒரு நாள் இப்படியாகத் தெரிவித்துக்கொண்டார். யோகசுவாமிகள் பல நூற்றாண்டுகளாக இந்த உலகம் காணாத மிகப்பெரிய ஞானி. சைவம் புகட்டும் ஞானவரம்பிற்கு எல்லையாக அவர் வாழ்வில் கடைப்பிடித்த சைவநெறியின் உயர்ந்த சீலத்தை பெரியபுராணத்து நன்கு பலமுறைபடித்து நன்னெறிப்பட்டு ஒழுகி தனது ஒழுக்க அநுபவத்தில் கண்டுகொள்பவராலும் களவிலாத உள்ளமுடையவராலுமே உணரமுடியும்.

தன்னலமின்றித் தானும் ஒன்றின்றி இருக்க வல்ல ஞானி அவர். இந்த ஞானி ஒரு அருட்பேற்றால் திருவருள் எல்லைக்குள் சித்தம்புகுந்து அருளால் எல்லாரும் செய்வன நினைப்பன யாவையுமே இருந்த இடத்தில் இருந்து உணரும் ஆற்றல் படைத்தவர்.

ஒருவரைத் தான் காணவிரும்பின் ஊன்றி நினைத்திட அத்தகைபேர் தம்முன்வந்து சேரவைக்கும் சிந்தைவலு உடையவர்,

தனது வாழ்நாளின் முடிவைத் தானே உணர்ந்து இன்னநாள் என்று சொல்ல வல்லவராவார் என்றால் அவர்பெருமை எம்மால் இங்கு எழுதிக் காட்டமுடியாது.

கேடு நலம் இவையாவும் கடந்து துரியாதீத நிலையில் மனத்தை ஒடுக்கி வாழவல்ல அவர்தாம் அடிபேற்கு சைவசீலம உணரவைத்தவர்.

பெரியபுராணத்திற்கும் கந்தபுராணத்திற்கும் அடியேன் உரைஒன்று எழுதிவெளியிட்டு இலங்கை இந்தியா என்னும் இரு நாடுகளுக்கும் எவருக்கும் இணைபாகாவகையில் நாம் சைவ உலகிற்குச் செய்த பணி, சுருங்கச் சொன்னால் யோகசுவாமிகளின் வாழ்வின் உணர்வே நமக்கு உரைஎழுதவைத்தது. கந்தபுராணம் பெரியபுராணம் இரண்டிற்கும் நமது உரை யோகசுவாமிகள் வாழ்ந்த சீலத்தின் அருள் வழியானது.

அத்தகைய திருவருள் பேறுடைய மகான் மாட்டால் இடியுண்டு வீழ்ந்து காலில் உள்ள எலும்பில் சிறிது காயம் ஏற்பட்டு பின்னர் சத்திரசிகிச்சையில் அக்காயம் அவரை நடக்கமுடியாத நிலையில் வைத்தது. பலரிடத்தும் இத்தகைய அருட்பேறு உடையவர்க்கு இப்படியும் வரலாமே, என்ற கேள்விக்கு இடமாகியது.

எங்கள் முன்னைப் பெரியோர் அருள் தெளிவால் இவ்வுலகமக்களுக்குச் சொல்லிவைத்த நல்வாக்கியங்களில் ஒன்று யாதெனின்;

"ஓர் குருவினுடைய சீடர்கள் அல்லது சிநேகிதர்கள் அக்குருவைப்போன்ற தூயநடத்தையை மேற்கொள்ளாதிருந்தால் அந்தச் சீடராலும் சிநேகிதராலும் கேடுவிளையும்" என்பதாகும், இது உண்மை. இதில் நின்று எந்த ஞானியும் தவற முடியாது. இந்தநிலை யோகசுவாமிக்கும் உண்டு. அதை நீக்கமுடியாது இன்னமும் பிள்ளை செய்யும் பழி பிதாவைச் சேரும் மனைவியின் துர்நடத்தை கணவனைச்சேரும் ஊர்மக்களின் தவறான நடத்தை புரோகிதன் அதாவது ஊர் மக்களிடம் தானம் வாங்குவோனைச்சேரும் இதில் யாரும் தவறமுடியாது.

இன்றுள்ள பிராமணர் அனைவரும் கேடுற்று வேதநெறி நீங்கிய தன்மை குருமக்களின் தீய நடத்தையும் அந்த அறமிலாத பாவிப் பிராமணனின் பிள்ளைகளின் மனைவிமாரின் தவறான நடத்தையுமாகும்.

இந்த உண்மைகளை சைவமக்கள் நன்கு தெளியவேண்டும். அடுத்து திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் முதலியோர் உலக மக்களுடன கொண்டாட்டம் வைத்திடவில்லையோ? அவர்கட்கு குறைவில்லையே எனக் கேட்டால் பெரியபுராணத்தை நன்கு உணர்ந்தால் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் முதலியோருடைய உறவு சீலமெய் தொண்டருடனாயது என்பது புலனாகியது.

சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு படித்திரம் (உணவுப்பொருள்) அனுப்பிவந்த குண்டையூர்கிழார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு இராமேச்சுரத்தை தலையால் சாய்த்து வணங்குவார்கள் தவநெறியில் தாம் ஆழ்ந்தநிலையில நிற்பார்கள்.

இராட்சதர் கொலையில் வல்லமையுடையவர். சுடுவதில் வெட்டுவதில் அடிப்பதில் மிக வல்லவர்: கொடுமையே தங்களிடம் தங்கப்பெற்றவர். அத்தகைய இராட்சதரைக்கொன்ற திருமால் என இராமரைக் கூறுகின்றார்.

கோடிக்கணக்கான பெரும் தவங்களைச்செய்து வரம்பெற்று உலகைப் பின்னர் தம் கொடுமைக்கு ஆளாக்கி தீங்குபுரிதலால் தம்தவப்பலனைக் கெடுத்துக் குன்றிய இராட்சதரை எலலாம் சக்கரப்படையால் கீழ்வீழும் வண்ணம் வெட்டி அழித்து தீ தனது கோபம் நீங்கி உண்மை உணர்ந்து அன்புகொண்டு இராமா தேடிச்செய்த கோயில் திரு இராமேச்சுரத்தை என் நெஞ்சமே நீ உன் மனம் நாடும் பெரும் நாட்டயாக நாடிவாழ் வாயாக.

குன்றினர் என்றது தவம்செய்வார்க்கு நன்மை ஏற்படுவதும் முதன்மை வருவதும் இயல்பு. ஆனல் அதை துர்நடத்தை இழக்கச்செய்து குன்றச்செய்யும் என்பதால் குன்றினர் என்றார்.

கொலைசெய்த பின்பும் திருமால் சிவன்பால் அன்புடைசுவில்லை என்பதால் அன்புகொண்டு எனப்பட்டது.

## சோடிமா தவங்கள் செய்து குன்றினர் தம்மை எல்லாம்
## வீடவே சக்க ரத்தால் எறிந்துபின் அன்பு கொண்டு
## தேடிமால் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தை
## நாடிவாழ் நெஞ்ச மேநீ நன்னெறி யாகு மன்றே.

சோடிக்கணக்கான பெரும் தவங்களைச் செய்து வரம்பெற்றும் பெண்போகம் பிறன்மனை நயத்தல் நல்லவர்க்கு துயர்செய்தல் கொலை புலால் உணல் மது உண்டல் முதலிய பாதகங்களைப் புரிதலாலே பழிபெருகித் தவம் குன்றிப்போன இராட்சதரை எல்லாம் அழியும்படியாகச் சச்சுரத்தால் எறிந்து வெட்டி அழித்துப் பின்னர் கொடியரை அழித்திடக் கூரிய சக்கரப்படை தந்த பகவானை சிவனைநினைந்து அன்புகொண்டு கடற்கரையில் ஓர் இடம் பொருத்தமானதாகப் புண்ணியம் நிறைந்ததாகத் திருமால் தேடிச்செய்த கோயில் திருஇராமேச்சுரத்தை என் நெஞ்சே நீ நாடிவாழ்ந்துகொள்வாயாக. அது உனக்கு நன்நெறியாகுமன்றே.

கோடிகணக்கில் தவம்செய்து வரம்பெற்றுச் சுகபோகம் அதிகாரத்துடன் கொலை பெண்போகம் இவைகளுடன் கலந்தால் தவம் குன்றும் என்பது இப்பாடலால் தெரியுங்கள்.

அன்புபூண்டு செய்தல் இவ்விடம் நோக்கற்பாலது. இராட்சதரை அழித்து இராமர் தலைமைப்பாடு எய்தியும் தன் தலைமைப்பாட்டை மறந்து இராமர் அன்புருவாயது இங்கு நோக்கற்பாலது. அன்புபூணல் என்பது வெற்று சிறப்பு இதனல் எதும் பயனில்லை என்பதன் தெளிவே அன்பு பூண்டதின் காரணமாகும்.

## வன்கண்ணர் வாள ரக்கர் வாழ்வினை பொன்ற றியார்
## புன்கண்ண ராகிநின்று போர்கள்செய் தாரை மாட்டிச்
## செங்கண்மால் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தைத்
## தங்கண்ணால் எய்த வல்லார் தாழ்வாரந் தலைவன் பாலே.

கொடியவர்கள் வாள் போல் வளைந்த பற்களையுடைய இராட்சதர் நல்வாழ்வு சீலம் என்பன அறியார். மிகவும் சிறுமை உடையவராகி இரக்கமின்றி நின்று பல போர்கள் புரிந்த அந்த இராட்சதரை குரங்குப்படையால் வளைத்து மாட்டி அழித்து இல்லாமல் செய்து சிவந்தகண் உடைய திருமால் (இராமர்) செய்த கோயில் திருஇராமேச்சுரத்தை தனது கண்ணால் தொழுதிட அங்கு சென்று அடையவல்லார் சிவன் அருள் வெள்ளத்தில தாழ்ந்து கொள்வார்கள்.

கொடுமை செய்வோர் நல்வாழ்வு என்பது அறியார்கள். அவர்கள் பொல்லாமையிலே நிலைத்து நிற்பார்கள். சாந்தம் இரக்கம் தயை சிவகாருண்யம் என்பனகைத் தெரியார்கள். இதனையே வன்கண்ணர் வாழ்வினை ஒன்று அறியார்கள் எனப்பட்டது.

## வரைகளொத் தேயு யர்ந்த மணிமுடி அரக்கர் கோனை
## விரையமுற் றறவொ டுக்கி மீண்டுமால் செய்த கோயில்
## திரைகள்முத் தால்வ ணங்குந் திருஇரா மேச்சு ரத்தை
## உரைகள்பத் தாலு ரைப்பார் உள்குவார் அன்பி னாலே.

மலைகளைப்போல உயர்ந்த இரத்தின முடிதரித்த இராட்சதர்க்கு தலைவனன் இராவணனை அழித்திட போராக்கோலம் கொண்டு சென்று அறவே அவனை அழித்து இராட்சதரை ஒடுக்கி அவ்விடத்தில் இராமர் செய்த கோயில் அதனை திரைகள் சென்று முத்தினை சொரிந்து வணங்கும் திருஇராமேசசுரத்தை நாம் பாடிய பாடல் பத்தினையும் ஓதி வணங்குவார் சிவனை அன்பினால் நினைபவராகின்றார்.

சமுத்திரத்தின் திரைகள் முத்தினை கரையில் சொரிவது முத்தால் இராமேச்சரத்தை வணங்குதல் போலாகும். இப்பாடலை ஓதுவார் சிவனை அன்பினால் வணங்குபவர் ஆகின்றார்.

உரைகள் பத்து என்பது சிவன் அருளால் வந்த வேதம் இவை. அதுவன்றி மனிதரால் பாடப்படும் தோத்திரப்பாடல் அல்ல என்பது குறிப்பு.

என்னும் வேளாளன் பிரபு தலைசிறந்த ஓர் சிவ பக்தர். சுந்தரர்க்கு பொருள் கொடுக்க வயலில நெல்வரவில்லை என்றதால் தான் உண்ணுமல் பல நாள் பட்டினிகிடந்த வரலாறு பெரியபுராணம் சொல்கிறது இதுமட்டன்றி எமது நாயன்மார்கள் எந்த நிலையிலும் அரச்போகங்கட்குரிய தொடர்பே வைத்திடவில்லை. அதனலே நாயன்மாருடைய வாழ்வில் எத்தகைய சிறுமையும் ஏற்படவில்லை.

யோகசுவாமிகள் இராமலிங்கம் இல்லத்திற்கு பலமுறை செல்பவர். அவருடைய மகள் இருபேரும் சுவாமிகள் பாடிய நற்சிந்தனைப் பாடல்களை நன்கு பாடுபவர்.

இன்னமும் யோகசுவாமி தெரியாத்தனமாய் சிவதொண்டன் நிலையத்தில் சிக்குப்பட்டுக்கொண்டேன் என்று பலமுறையும் சொல்பவர். சுவாமி தான்பெற்ற நல்ல துறவின் இன்பநெறியைப் பிறரும் பெறட்டும் என்ற நல்நோக்கால் நிலையம் உண்டாக்க அது பின்னர் உத்தியோகம் பணம் தரகு கலியாணம் இவைபெறும் இலேசான ஒரு இடமாக மாறிவிட்டது.

தற்பொழுது சிவதொண்டன் நிலயத்தை நிர்வகிப்பார் எவரும நெஞ்சில் வஞ்சமும் குரோதமும் பொய்யும் நீங்காதவர்.

இவர்களால் சிவதொண்டன் நிலயத்தை உண்மையானவழி நிர்வகிக்கமுடியாது: இவர்கள கல்லூரிகளை நிர்வகிக்கலாம்; வேறு கம்பனிகளை நிர்வகிக்கலாம்; அரசாங்கத்தில் திறம்படச் சேவை புரியலாம். ஆனல் அது வேறு. சிவதொண்டன நிலய நிர்வாகம் வேறு.

அங்கு உள்ளார் முதல் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமை; உணவில் கட்டுப்பாடு; உளத்தின் களியாட்டப்போக்கில் கட்டுப்பாடு: குடும்பவாழ்வில் ஓர் பற்றற்ற நிலை இவ்வளவும் உடையவராய் இருக்கவேண்டும். மிலேச்சநாட்டு நாகரிகம் எள் அளவும் அவரிடம் இருக்கக்கூடாது: இருந்தால் நிலயம் அருள்நெறியில் தூய்மைப் படாது என்பது உண்மை.

தூய துறவிகட்கு இன்றைய கார் பிளேன் டெலிவிசன் இவை எந்த பற்றற்ற நிலையிலும் பழுதை வருவிக்கும்.

எமது நாயன்மார் எந்தவகையில் வண்டி வாகனம் கூட்டம் ஊர்வலம் என்பன எட்டுணையேனும் பாவிக்கவில்லை. அவர்கள் செய்தது தொண்டு. எப்பொழுதும் தீங்கினை வருவியாது.

ஆதலினல் யோகசுவாமிகளுடன் கூடிய மக்களும் அவரைப் பேணிய மக்களும் சிவதொண்டன் நிலயத்தாரும் எல்லோருமே மிலேச்ச நாகரிகத்தவர்: ஆதலால் இவர்சேர்க்கை யோகசுவாமிக்கு துன்பம் வருவித்தலில் ஆச்சரியமில்லை. பெரும்பாலான யோகசுவாமியிடம் சென்ற அன்பர்கள் காசு கலியாணம் உத்தியோகம் இடமாற்றம் பாராளுமன்ற தேர்தல் வெற்றி காணிவாங்க வீடுகட்ட கடன்வசதி இப்படியான தமது வாழ்வின் இலட்சியத்திற்காகச் சென்றனரே அன்றி சுவாமியைப் போன்று தூய நன்னெறிப்பட யாரும் செல்லவில்லை. சிலருக்கு தமது பிரச்சனையன்றி சுவாமி ஒழுகிய வைதிக நெறியைப் பின்பற்றினர் ஒருவரில்லை. ஆனல் திருஞானசம்பந்தர் சுந்தரருடன் கூடிய அடியார் கூட்டம் அவரைப் பெற்றது.

# கொக்குவில் பொற்பதிவிநாயகர் பாலஸ்தாபனம்பற்றிஓர் அந்தணர் கூறுவது

## பொற்பதிவிநாயகரைச் சுடலையிலும் கொண்டுபோய் வைப்பேன் என்கிறாராம் குருக்கள்

ச. ரவீந்திரநாதசர்மா
பொற்பதி றோட்
கொக்குவில் கிழக்கு

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சுனம் சந்திரதீப ஆசிரியர்

திருவாளர் வை. நல்லையா அவர்களுக்கு எனது அன்பான வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நாம் எமது சமுகத்தைப்பற்றி எழுதக்கூடாது. இருந்தாலும் எமக்கு உரிமையான கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தில் நடந்த (24 8. 80 ஞாயிற்றுக் கிழமை) காலை 6.15 மணிமுதல் 7.05 வரையுள்ள சிங்கலக்கினமும் உத்தராட நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்ததில் நடைபெற்ற பாலஸ்தாபனத்திலு சீர்கேடுகள் பலதை நான் கண்டதைத் தங்களிடம் அறியத்தருகிறேன்.

பாலஸ்தாபன பிரதமகுரு பொன்னப்பகக் குருக்கள் என்று அழைக்கப்படும் (சாத்துப்படி ஐயா) பிரதமகுருவாக நடத்திவைதது [illegible] த்து உதவியாக கோண்டாவில் சாஸ்திரிகள் எவ்வளவு படித்தும் சாஸ்த்திரிகள் காற்றுடிபோல் பறந்ததுதான் மிச்சம். சனிக்கிழமை பின்னேரம் பிரதமகுரு வந்தார். அவரின் சாதகமான சாஸ்திரிகள் கோவில் ஐயர் எல்லோரும வந்தார்கள். மாலை ஆறு மணியளவில் பாலஸ்தாபனத்திற்கு ஏற்ற யாகம் (யாகசாலை) கட்டவில்லை. விநாயகருக்கு பரிவாரமாக கும்பம் நான்கு மூலையிலும் தலா 5, 5, 7, 8 கும்பம் வைத்திருந்தார்கள். பின் கர்மாரம்பம் வாஸ்து சாந்தி நடைபெற்றபின் சாதாரணமாக ஸ்நபனாபிஷேகம் வைத்தார்கள். சாஸ்திரிகள் பத்ததிவாசித்தார் எல்லாம் அன்றிரவு நிறைவேறியது. இரவு 11 மணியளவில் காரில் சாஸ்திரிகள் பாலஸ்தாபன பிரதான குருவான பொன்னப்பாக் குருக்கள் சகிதம் வீடு சென்று விட்டார்கள். மறுநாள் காலை 4.30 மணியளவில் வந்தார் பிரதானகுரு. சாஸ்திரிகள் இல்லை பிரதானகுரு. சாதாரண (சங்கற்பம்) செய்தார் பின் பரிவார பூஜை நடைபெற்றது: சிறிய வேதம் சொல்லப்பட்டது. பாலஸ்த்தாபன கும்பாபிஷேகம் நிறைவேறியது. ஒரு குரு உடன் வீடுதிரும்பிவிட்டார். கோவிலில் இப்படியான பாலஸ்தானம் நடைபெறும் என்றால் ஊர் எப்படி நல்லாயிருக்கும்: தற்போது கோயில் பூசகரின் கோவிலாம்) தான் நினைத்ததைச் செய்வாராம் தான் தன்று முறையில் என்னவேணும் என்றாலும் செய்வாராம் விநாயகப் பெருமானை சுடலையிலும் கொண்டு போய் வைப்பாராம். இதுமட்டுமல்ல என்னும் எத்தனையோ செய்வாராம். இப்படியான சீர்கேடுகள் பற்றி நாம் யாரிடம் கூறமுடியும். தெய்வத்தில் நம்பிக்கை கொள்ளும் அடியாரைக் கெடுக்கும் போக்கில் தான் அவர்கள் செல்கிறார்கள். பாலஸ்தாபனம் ஏன்செய்வது அது எதற்காக செய்வது என்ற எண்ணம் குருக்களுக்குத்தான் தெரியாமல் விட்டால் கோண்டாவில் சாஸ்திரிகட்குக்கூட நல்ல எண்ணம் வரவில்லையா. எத்தனை பிராமணஇளைஞர்கட்கு பாடம் போதிக்கும் சாஸ்திரிகளே இம்மாதிரி சென்றால் எதிர்காலம் என்னவாயிருக்கும். தன்னலம் கருதி பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் பாலஸ்தாபனம் செய்வது? செய்தபின் பணம் சேர்ப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் செய்ய 50 ரூபா சேர்த்தால் வெளியில் வெள்ளையடிப்பது (ஈஸ்மன் கலரில்) விநாயக பெருமானின் சன்நிதி காட்சியளிக்கும். பின் கும்பாபிஷேகம் நிறைவு பெறும் ஊர்மக்கள் சொல்லுவார் அந்தஐயர் நல்ல ஐயர் அந்தஐயர் தான் நல்லவடிவாய் கலா அடித்துள்ளார். ஐந்தாறு ஒலிபெருக்கி பிடித்தவர் கோஷ்டிகள் படித்தவர் என்றெல்லாம் இந்தமாதிரியான வெளி வேடிக்கைகளைமட்டும் தவறுமல் காட்டிவிடுவார்கள். இப்படியான செயல்கள் செய்து பின் கண்டபலன் யாது? பாலஸ்தாபனம் செய்யத் தகுதியற்ற குருமாரின் போக்கில் போனல் ஊர் எப்படி நல்லாவரும் மழை எப்படிவரும் நாட்டில் எப்படி ஒற்றுமை இருக்கும் வெளியில் பெரிதாக பத்திரிகையடிப்பது பாலஸ்தானம் என்று கோயிலில் நடைபெற்றது சாதாரண ஸ்நபனபிசேகம் போல். எப்படித்தான் இருந்தாலும அவனவன் தான் அந்த அந்தக் காரியங்கள் செய்யவேண்டும். தவில் வாசிப்பவரை நாதஸ்வரம் வாசிக்கச் சொன்னல் அந்த உண்மையான சொல் வருமா? சாத்துப்படி சாத்துபவரை பாலஸ்தானத்தை செய்யென்றல் எப்படிச் செய்வார். அதைச் செய்யச் சொன்னவர் எப்படியாய் இருப்பார் செய்தவர் எப்படியாய் இருப்பார். இவை அனைத்துக்கும பத்திரிகை வாசிக்கவந்தவர் எப்படியாக இருப்பார். இவை அனைத்தும் சேர்ந்து செய்த பாலஸ்தானம் எப்படியாக இருக்குமென ஊர்மக்கள் யோசிக்கவேண்டிய விடயம். கோவிலிலே நான் நேரில் நின்று பார்த்தேன். உண்மையாக வேறுயாராக இருந்தாலும் உடன் கேட்டுப் பாருங்கள் பாலஸ்தானத்தின் சீர்கேடுகள் பற்றி. குருக்கள் இரட்சாபந்தனம் கட்டியிருந்தால் வீடு சென்று மறுநாள் வந்து பாலஸ்தாபனம் செய்யலாமா! பாலஸ்தாபனகும்பாபிஷேகம் முடிந்து மகாஅபிஷேகம் செய்தார்களா. பாலஸ்தாபனம் செய்து விநாயகப்பெருமானை முறைப்படி வைத்துள்ளார்களா? வெளியில் வெள்ளை அடிக்கும் நோக்குடன்தான் பாலஸ்தானம் செய்தாரே தவிர வேறு எந்தவிதமான நோக்கமும்மல்ல.

இதை கூடியசீக்கிரம் தங்களின் பத்திரிகையில் பிரசுரிக்கும்வண்ணம் தாழ்மையாக கேட்கிறேன்.

இப்படிக்கு
ச.ரவீந்திரசர்மா

# சுருட்டுத்தொழிலாளரை கோவில்நிர்வாகத்தில் சேர்க்கத் தகுதிகேட்டனர்

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில் வழிபடுவோர்சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் கூடி கோயில் நிர்வாகத்திற்கு அங்கத்தவரைத் தேர்ந்தது. அக்கோயிலில் நிர்வாகத்தை முன்பு பணக்காரக்கூட்டம் நடத்தியது. அதில் நிர்வாக சபைக்கு ஓரிரு சுருட்டுத்தொழிலாளரைப் பொதுச்சபை அங்கத்தவர் தெரிந்து பிரேரிக்கும்பொழுது பணம் படைத்த மக்கள் சுருட்டுத் தொழிலாளிகட்கு என்ன படிப்பிருக்கு என்ன தகுதி இருக்கு? எனக் கேட்டனர். உலக விளப்பமில்லாத இவர்கள் நிர்வாகத்திலிருந்து என்ன பிரயோசனமாகும் என்று காதில் ஓட்டையுடைய ஓர் ஆசிரியரும் பணக்கார வகுப்பாருடன் சேர்ந்து வாதிட்டாராம். ஐயரும் மறைமுகமாக ஆசிரியரை ஆதரித்தாராம்; இந்த நிலையில் பணக்காரரது உறவினர்கள் சீக்காயடிக்க கூட்டம் குழம்பியதாம்.

கூட்டம் குழம்பியதும் பணக்காரவர்க்கமும் ஐயரும் முன்பிருந்த பணக்காரரில் ஒருவரான சிறுப்பர்கூட்டத்தைச் சேர்ந்தவரிடம் கோயில் நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டார்.

பணக்காரரது பிள்ளைகள் கோயில் அருகாமையில் உள்ள பாடசாலையில் நைட்கிளப் நடத்த ஐயர் தோசை சுட்டுக்கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மனிதகுலத்தில் மானம் மரியாதை சீலம் சிறப்பு கடவுள் சந்நிதியில் யாவரையும் சமமாகப் பார்த்து வாழமுடியாத பணக்காரருக்கு ஏன் கோயில்? பணத்திமிர் காட்டவோ எனச் சந்திரதீபம் கேட்கிறது.

# ரூபா ஒருலட்சம்பற்றி ஒருகடிதம்

## பரிசுகேட்பவர் வேதாகமம் விளங்கியுள்ளாரா?

உ
சிவமயம்

ஆராலிதெற்கு,
வட்டுக்கோட்டை;

கனந்தங்கிய ஆசிரியர், அவர்கட்கு
சந்தரதீபம்,

அன்பார்ந்த ஐயா!

தங்கள் இதழ் 3 சுடர்: 11 ரௌத்திரி வருஷம் சித்திரைமீ 6ம்வ வெள்ளிக்கிழமை (18—4—1980) ''நம் நாட்டில் கோவில் சொத்தை தன் சொந்த வாழ்க்கைக்கு எடுக்காத கோயில் நிர்வாகம் வேதாகம வழி நின்று கோவிலில் மகோற்சவம்—பூசை நடாத்தும் பிராமணர்கள், குருக்கள்மார் இவர்களைக்காட்டினல் சந்திரதீபம் லட்சம் ரூபா பரிசு தரவுள்ளது''

இவ்விளம்பரம் தங்கள் சந்திரதீபத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆராலிதெற்கு கரைப்பட்டி விநாயகர் ஆலயநிர்வாகி திரு க.சிற்றம்பலம் அவர்கள் கோவிற் சொத்தைத் தன் சொந்த வாழ்க்கைக்கு எடுக்காதது மாத்திரமல்லாமல் தமது வருவாயில் ஒருபகுதியையும் மாதம் மாதம் மேற்படி கோயிற் செலவுக்கே செலவிட்டு வருகின்ருர் என்பது உண்மை.

அத்துடன் அவரது நிர்வாகத்தின் கீழ் கோயிற் பூசகராக இருக்கும் எஸ். இராமமூர்த்திக்குருக்கள் ஆகம முறைப்படி பூசையும் மகோற்சவமும் நடாத்திவருகின்ருர். இக்கோயிலில் மூன்றுகாலப் பூசையும் காலை 6 மணிக்கும் மதியபூசை பகல் 12 மணிக்கும் மாலைப்பூசை மாலை 6 மணிக்கும் நேரம் தவருது ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

மகோற்சவம் காலை 7 மணி தொடக்கம் 10 மணிவரையிலும் மாலை 6 மணி தொடக்கம் 9 மணிவரையிலும் காலந்தவருமல் முறையே பகல் 8 திருவிழாவும் இரவுத் திருவிழாவும் நடைபெற்றுவருகிறது. ஐந்து வருடங்களாகச் செவ்வனே நடைபெற்று வரும் இக்கோயில் மகோற்சவத்திற்கு மேளக்கச்சேரியோ சின்னமேளக்கச்சேரியோ வேறு எதுவிதமான கேளிக்கைகளோ எதுவும் கிடையாது.

இக்கோயிற் குருக்கள் வேதாகம வழிநின்று மனச்சாட்சிக்கு விரோதமில்லாதமுறையில் செவ்வனே பூசையும் மகோற்சவமும் நடாத்திவருகின்ருர்.

நீங்கள் இவ்வுண்மையை ஆராய்ந்து பார்த்து ஆவனசெய்யவும்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
வி. நாகலிங்கம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

## மேற்படி கடிதத்திற்கு எமது பதில்

அன்புடைய அதிபர் அவர்கட்கு

உங்கள் கடிதத்திற்கு நன்றி. நீங்கள் தெரிவித்தபடி திரு. சிற்றம்பலமவர்கள் (நிர்வாகி) இந்த நாட்டில் இல்லை. அவர் வேறுதேசத்திலிருக்கிருர். தற்பொழுது கோயில் நிர்வாகம் ஓர் சபையிடம் உள்ளது. சபை கோயில் சொத்தை ஒலிபெருக்கி முதலிய வேடிக்கை கேளிக்கைகளில் செலவிட்டு மகிழ்கிறது; இது சுயநலம்;

கோயில் திருவிழாக்கள் நேரத்திற்கு நடந்தாலும் பிரசங்கம் முதலியன சுவாமி உள்ளே சென்ற பின்பும் நடைபெற்று காலை 5 மணியிலிருந்து இரவோடு இரவாக உங்கள் கோயில் ஒலிபெருக்கிமூலம் இராட்சதரின் கூக்குரலாகவே இருந்தது. கோயில் வேதநெறியிலில்லை.

உங்கள் ஐயர் வேதநெறிக்குரியரல்லர்; அவர் நித்திய பூசைசெய்பவர் கொடியும் ஏற்றினர். அடுத்து அவர் வீடு மிலேச்ச நாகரிகப் பொருளான வானெலிமுதல் கருவிகளுடன் கூடியது. காலில் செருப்பு, பூநூலை மறைத்துச் சட்டையும் போடுபவர். அடுத்து கொடியேற்றும் காலங்களில் அவர் கோயில் எல்லைக்குள் தங்கவில்லை; வீட்டில் மனைவியுடன்சென்று தங்கியவர். தான் சமைத்த உணவு ஒரு பொழுது மட்டும் சாப்பிடவில்லை. ஒலிபெருக்கியில் மந்திரம் சொல்பவர்.

நேரத்திற்கு பூசை இயந்திரமும் செய்யும். வேதநெறி இயந்திரமல்ல; தூயவாழ்வே வேதநெறியின் அத்திவாரம் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

# துர்க்கைஅம்மன்கோவில் வதந்தி பற்றிச் சந்திரதீபமும் நம்பவில்லை

துர்க்கை அம்மன் பண்டிகை தங்கம்மாவின கனவில் தோன்றி, நான் போகிறேன் என்று சொன்னதாகவும் அது உண்மையானதா? என்றும் என்னைத் தெரிந்த பலரும் என்னிடம் கேட்டனர். ஆனல் அதை நாம் நம்பவில்லை எனச் சொன்னேன்.

ஏனெனில் கன்னித் தெய்வமென வேதங்களில் கூறப்படும் துர்க்கை இன்று தெல்லிப்பழைச் சேர்ந்த துர்க்கை அம்மன் கோவிலில் ஒரு போதும் இருக்கமாட்டாது. தெல்லிப்பழையில் வாழும் எந்த அம்மா அல்லது ஐயா கனவிலும் துர்க்கை அம்மன் தோன்றமாட்டாது. இந்த வதந்தியைப் பெரும்பாலும் துர்க்கையம்மன்கோயிலில் நடக்கும் அநாசாரமான நடத்தைகளைக் கண்ட யாரேனும் ஒருவர் பரப்பியிருக்கலாம். தெல்லிப்பழை துர்க்கைஅம்மன் கோயில் நிர்வாகமே கலியாணம் காசுவருமென்ற வீண்வதந்திகளைப் பத்திரிகை மூலமும் பேச்சுமூலமும் பரப்பிக் காசு சேர்த்துக்கொள்வதை நீங்கள் அறியலாம். இந்த வதந்தியும் ஒரு ஏமாற்றுவித்தையே.

இம்முறை நடந்த மகோற்சவத்தின்போது எமது சைவசீலங்களுக்கு அபசாரம் விளைவிப்பதான—முரணை பலபடம்பிடித்துக்கொள்ள முடியாத காட்சிகள நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வருகிறது. அவைகளுள் சிலவருமாறு?

கும்பிடவருவோரின் தகைவமயறிந்து அதற்கேற்பப் பாகுபாடான உபசரிப்பு, உள்ளே நின்ற ஐயர்களின் சேஷ்டைகள், கும்பிடமுடியாத நவநாகரிகத்தில் ஒலிபெருக்கியின் குழறல், தேர் முத்த பெண்களிடம் தொண்டர்படையினர் காட்டிய விநோதங்கள். துர்க்கையம்மன் தேரேறுமுன் தேரிலேறிய தங்கம்மா, அந்தத் தங்கம்மாவுக்கும் மேளவாத்தியக்காரர் மதுவெறியில் அடிபிடி — கெடுபிடி, கோயில் பணமும் பொருள்களும் களவு போனமை, வீதியூடு காட்சிதந்த கன்னியர் — காளையர்சேர்ந்த காமநாடகம் இவ்வளவும் நடைபெறக் கண்டும் இல்லையெனச் சாதிக்கும் தங்கம்மாவுக்குத் துரந்தரி என்று பட்டம் சூட்டிய கி. வா. ஜகந்நாதனின் மூளைத்திறனைப் பாராட்டுகிறோம். துர்க்காதுரந்தரி என்பது துர்க்கையைக் கலைப்பவள் என்பதற்கும் ஒரு பொருளாகும். கன்னித் தெய்வம் துர்க்கை காமஉணர்வுக்கு அப்பாற்பட்டதென்பதைத் திரு. கி. வா. ஜகந்நாதன் அறிந்துகொண்டார்போலும்.

# அன்னதானத்தில் சோற்றை அவித்துக்கொட்டுவதா?

முள்ளியவளையைச் சேர்ந்த ஒரு சமாதான நீதவான் நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மகோற்சவத்தின் போது அன்னதானம் செய்யும் நோக்குடன்வந்து கோயிலில் சோறுசமைத்துக் கொடுத்தார். அன்னதானம் செய்த அன்று பின்னேரம் என்னைச் சந்தித்த மேற்படி சமாதானநீதிவான் என்னிடம் தெரிவித்தவற்றைக் கீழே தருகிறேன்.

தான் வழமைபோன்று அரிசி சாமான் கொண்டுவந்து அவித்து ஆட்களைக் கூப்பிட்டு அன்னதானம் செய்தாராம். தான் பெரும் பகிரதப் பிரயத்தனம் செய்தும் பத்துக்கோத்தரிசிச் சோறளவில் மிஞ்சிவிட்டதாம். இதற்குக் காரணம் யாழ்ப்பாணநகரில் பிரபல பிடவைக்கடை வைத்திருக்கும் ஒரு பிரமுகர் பிரமாண்டமான அளவில் ஒரு வீடுகட்டிக் குடிபுகும் வைபவம் அன்றுநடத்தினராம்; அந்தப் பிரமுகரின் வீடு குடிபுகும் வைபவத்தில் கொடுக்கப்படும் அன்னதானத்திற்காக நல்லூர்ப் பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டனராம். அதனலே தானவித்த சோறு மிஞ்சிவிட்டதாகப் பெரும்மனவேதனைப்பட்டார். அப்பொழுது அவரிடம் ''ஐயா நீங்கள் செய்வது யாதாகிலும் சரி அன்னதானம் செய்வதின் நோக்கத்தை நன்கு விளங்கிக்கொள்ளாமல் செய்துவிட்டீர்; அன்னதானம் என்பதன் நோக்கம் உணவின்றி வாடுவோருக்கு உணவு கொடுத்தலேயாகும். அப்படியிருக்க நல்லூரில் கொடுப்பது நன்று என நம்புதல் பேதமை; எல்லோரும் அன்னதானம் செய்யும் நல்லூருக்கு வந்து அன்னதானஞ் செய்வது தவருன செயலாகும்'';

உதாரணமாக உங்கள் ஊரில் எத்தனை ஏழைகள் அலைகிருர்கள். அவர்களிடமும் நல்லூர்க் கந்தன் உண்டு என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ளுங்கள். உங்கள் ஊரில் ஒரு பழுதடைந்த முருகன் ஆலயமிருக்கிறது. அங்கு உங்கள் மனைவியும் நீங்களும் சோறுசமைத்து ஏழைகளை அழைத்து தாராளமாகக் கொடுங்கள். அது தான் கொடை. நல்லூர் செல்வச் சந்நிதிபோன்ற ஆலயங்களில் அன்னதானத்திற்குச் சோறவித்துக்கொட்டி சிந்துவது ஒரு பாழான செயலாகும் என்றேன். அவருடன் அருகில் நின்ற ஒரு கல்வி அதிகாரி என் சொல்லைக் கேட்டுப் புன்சிரிப்புடன் என் வார்த்தை சரிஎன ஆமோதிப்பதை அவர் தலையசைப்பால் அறிந்துகொண்டேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மிடத்துள்ள காமஉணர்ச்சியும் களியாட்ட உணர்வும் நீங்கினாலன்றி தமிழினத்தை உயரச்செய்ய முடியாது.

## தாழ்வுற்ற தமிழினம் வாழ்வதற்கு ஆன்மபலமே இன்று வேண்டும் ஆன்மபலத்தைத் தருவன காமம் வஞ்சம் குரோதம் நீங்கிய நெஞ்சமேயாகும்

சைவ இளைஞர்களே! நான் இங்கு மிகத் தூய அன்புடன் எமது சைவ நெறியின் உயர்ந்த இலட்சியங்களையும் அவற்றால் நாம் பெறக்கூடிய நன்மைகளையும் எடுத்து எம் தமிழினத்தின் பெருவாழ்வும் சுதந்திரமடையும் நிலையும்பற்றிச் சில வார்த்தைகள் கூறுகின்றேன்.

இங்கு நாம் புதிதாக ஒரு கருத்தை கண்டுபிடித்துச் சொல்ல வருகின்றேன் அன்று. அது பல பல நூற்றுண்டுகளாக இன்னமும் கோடிக் கணக்கான காலங்களாக நம் முன்னைப் பெரியோர் கையாண்டுவந்த வழிகளை நான் அறிந்து அநுபவத்தில் தெளிந்துகொண்டபடியால் அவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

உலகில் ஆக்கத்தையும் அழிவையும் தேடித்தருவதில் மிகச் சக்தி வாய்ந்தது அணுசக்தி என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஆனல் இந்தக் கண்டுபிடிப்பு தற்பொழுது அழிவிற்கே வித்தாகிவிட்டது. அத்துடன் கொலைசெய்யும் படைபலத்திற்கும் அணு ஆயுதமாகிவிட்டது. ஆனல் எம் முதியோர்கள் அணுவிலும் பலமுள்ளதாகிய ஒரு பொருளைக் கண்டுபிடித்தனர். அது யாதெனில் தவம் என்பதாகும். அணு பகையை அழிவுமூலம் அடக்கி எமக்கு உதவியாகிறது. ஆனல் தவம் அப்படியன்று, தவம் பகைமையை அழிவு செய்யாமல் அடிபணியச் செய்து எம்மை உயரவைக்கிறது. இதை முற்றாக நம்புங்கள். முன்னிருந்த எங்கள் அரசர்கள் எத்தனையோபேர் இந்த உலகுமுழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டனர். உலகை எல்லாம் ஆண்ட சந்ததியினர் நாம் என்று மேடைகளில் வீரம் பேசுகின்றோம். ஆனல் எப்படி உலகம் முழுவதையும் ஆண்டோம் என்று எவருக்கும் சொல்லத் தெரியாது—புரிந்து கொள்ளவும்முடியாது. பகைமைவரக் காரணம் என்ன? நாம் அடிமையாக வந்ததன் புதினம் என்ன? என்ற இவற்றையெல்லாம் நாம் சற்றே சிந்திப்போமாகில் அதற்கு நாம செய்துகொண்ட — செய்துவருகின்ற தவக்குறைவே காரணமாகும் என்பதை அறியமுடியும்.

ஆதலினாலே இன்றைய எமது தமிழ் மக்களுடைய நிலையை எடுத்துக் கொண்டால் தமிழர் வாழுகின்றதாகிய இந்த இடங்களில் தவத்தை நீக்கி அவத்தையே பெருக்கிவரும் மக்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனாலே தமிழருடைய நிலை இலகுவாக அடிமைப்படுத்தக் கூடிய — ஒரு பழிபீடித்த சாதியாக மாறிவிட்டது.

இலங்கைநகர்ச் சரித்திரத்தை இன்று நாம் எடுத்துக்கொண்டால் அடிவாங்கித்தரும் மனிதரும் அடியை வாங்கிக்கொண்டு இருப்பிடம் விட்டோடும் மனிதருமாக எம் தமிழினம் வந்துவிட்டது. அடி வாங்கித்தரும் மனிதர் யாரென்றால் தமிழுரிமைப் போராட்டம் என்று மேடையில் முழக்கமிடும் அரசியல்வாதிகளாகும். அடிவாங்குவோர் யாரென நோக்குமிடத்து நன்மை தீமையை அறியாது வாழும் பொதுமக்களாகிய தமிழ் மக்கள்.

இந்தநிலையில் கடந்த சொற்ப காலத்துள் எத்தனை முறைகளாக அடியும் வாங்கிப் பொருளையும் பறிகொடுத்து உற்றார் சிலரின் உயிரையும் போக்கடித்து இருப்பிடம்விட்டு ஓடினோமென்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் என்ன? இதற்குக் காரணம் யாது என்பதை யாரேனும் சிந்தித்துத் தெளிந்து ஒரு முடிவுக்கு வந்தீர்களா? இந்த அடிவாங்குதலையும் பொருள் இழப்பையும் நாங்கள் தேர்தல் வரும்போது இனங்கண்டு வாக்கை அளிப்பதன்மூலம் ஒருமுடிவுக்குக் கொண்டுவரலாமா? இனங்கண்டு வாக்களித்துத் தமிழ்காங்கிரசார் என்ன செய்தார்கள்? தமிழ் அரசுக்கட்சி என்ன செய்தது? இன்றைய தமிழர்கூட்டணிதான் என்ன செய்துகொண்டிருக்கிறது. இந்த இனங்கண்டு வாக்களிப்பதன்மூலம் எந்தக்கட்சி மேலதிகமான பிரதிநிதித்துவம் மூலம் பாராளுமன்றம் சென்றும் தமிழராகிய நாம் அடி உதை வாங்காது தப்பித்தோமா? அல்லது நாம் கருதிய — கூறிய சுதந்திரம்தான் கிடைத்துவிட்டதா? இவைகளையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அப்போது இது யார்க்கும் தெளிவாகத் தெரிந்துவிடும். அரசியல் கட்சிகளால் எமக்குச் சுதந்திரம் தேடித்தரக்கூடிய வலு சற்றும் இல்லை. எனவே நாட்டில் நாம் சுதந்திரமாக வாழ வழிகாட்டுவது தவம் ஒன்றே என்பதை அறியமுடியும். அந்தத் தவத்தினுடைய இயல்பினைப்பற்றி நாம் கூறப் புகுங்கால் எமக்கு இடையூறாக வருவது காம உணர்வும் களியாட்டு மனப்பான்மையுமாகும். இவை இரண்டும் நீக்கலில் தவம் அடங்கியுள்ளது; எவனொருவன் காமத்தை வென்றெடுக்கிறானோ அவர்க்கே தான் முதற்கண் தவம்நெறி கைகூடும். அடுத்துத் தவத்திற்குத் தன்னலமென்பது பெரும இடையூறாக வருகிறது. இந்தக் களியாட்டமனம் தான் தன்னலத்திற்கு வித்தாகிவிடுகிறது. எத்தனையோ தமிழ்மக்கள் உயிரைப் பறிகொடுக்க வழிதேடிவிட்டு — அடிவாங்க வைத்துவிட்டு மேளதாள சகிதமாக வீதியூடு பவனி போன அரசியல்வாதிகளே தமிழ் உரிமைப் போராட்ட வீரர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்களால் எமது தமிழினத்திற்குச் சிறப்பைத் தேடித்தர உண்மையில் முடியாது என்பதை உணருங்கள். இவர்கள் யாவரும் தமிழுக்குச் சுதந்திரம் தேடிக்கொடுக்கும் அரசியல் வாதிகளல்ல. அதே தமிழை முன்வைத்து பொதுமக்களாகிய நம்மை ஏமாற்றி வாக்குப்பெற்று பாராளுமன்றம்செல்லும் சுயநலவாதிகள் என்று கருதக் கூடியவிதமாக அவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஆனதினாலே தமிழர் — அதாவது நமது தமிழ்மொழி — சுதந்திரம் பெறவேண்டுமாகில் அரசியல்மேடைகளை நாம் உபயோகிக்காமல் நாம் நம்மாலியன்றவகை தவநெறிகளைக் கடைப்பிடித்து அதன் மூலம் தமிழனிடத்தே ஒரு ஆத்மீக வலுவை உண்டாக்கி தமிழினத்தை உயரவைக்க நமது முன்னைப் பெரியோர் காட்டிவைத்த பெரிய வழிகளைக் கடைப்பிடிப்போம், இதனை ஒவ்வொரு சைவ இளைஞரும் உணர்ந்து கொள்ளவேண்டும.

கலியாணம்! கலியாணம்! நெடுங் காலமாகக் கலியாணமுங் காசுமே நமது தமிழ்மக்களுக்குப் பிடித்த பெரும் பீடையாகும். ஆகவே இந்தக் கலியாணம் என்ற மனப்பாங்கை உதறித்தள்ளி காசு என்ற மன வாஞ்சையைவிடுத்து காமம் பொய் கபடம் முதலியவற்றை நீக்கி மேலான ஒரு நெறியில் ஒழுகவல்லீரேயாகில் இந்த உலகம் உங்கள் கைவசமாகி விடும் என்று முன்னைப் பெரியோராகிய அறிஞர்கள் எமக்குத் திடமாகக் கூறிவைத்துள்ளனர். நாம் பொய் சொல்லவில்லை; உண்மையையே சொல்லுகிறோம். இதனை இளைஞராகிய எல்லீரும் மனப்பூர்வமாக ஏற்று நடந்துகொள்ள முன்வாருங்கள்.

ஒரு பெண்ணிடத்துக்கூட அனுபவிக்கப்படும் சிறிய இன்பத்தையும் பார்க்க அளவுகடந்த இன்பத்தை இந்தத் தவநெறி தானாகவே தேடித் தரும். அதுமட்டன்று: எமது சமுதாயமாகிய தமிழ் சமுதாயத்தையே முன் தூக்கிவைக்கும். இதனை நீங்கள் உறுதியுடன் நம்பிக்கொள்ளுங்கள்.

காரில் ஓடி பிளேனில் பறந்து வானொலிகேட்டு டெலிவிசன்பார்த்து மேடையில் பேசி வீடுகள் கட்டி விதம்பட உடுத்து நயம்பட உடை. வைத்து பல இனப்பெண்ணை மணந்து சிரித்து விளையாடி சேமித்து வைத்திருந்து நாம் பெரியவர் என்றோரது வாழ்வு பாழான முடிவாக சமுதாயத்தின் கேடாகி மரணத்தறுவாயில் அல்லல்தரும். இதை நீங்கள் கண்ணாறக் காணுவீர்கள்.

தமிழர் கூட்டணித் தலைவர் செல்வநாயகம் மயங்கி வீழ்ந்தவர்; பின்னா ஒரு நாளாதல் மயக்கம் தீரவில்லை. எத்துணை சிறந்த வைத்தியம் கொடுபட்டது. நோய் மாறியதா? தமிழ் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம் நல்லூர் கந்தசுவாமிக்கு வருடாவருடம் 1008 சங்கு வைத்து அபிஷேகம் செய்தவர். அது மட்டன்றி வேற கோவிலிற்கும் அப்படிச் செய்தவர்.

மேடைமீது ஏறிநின்று நான் தான் தமிழற்கு சுதந்திரம் தேடித் தரும் தலைவன் என முழங்கியவர். இவர்கள் தமிழருக்குச் சுதந்திரத்தைத் தேடித் தந்தார்களா? சுதந்திரம் தேடித் தருபவர் சிங்கப்பூரில் சென்று மரணம் அடைந்தாரே.

ஆதலால் நமது தமிழினத்தை நாம் தூக்கிவிடவேண்டுமென்றால் கட்சி தேவையில்லை பாராளுமன்றம் நாம் போகவேண்டியதில்லை. வாக்குப்பெற பேச்சுகள் வேண்டியதல்லை. பிரசாரம் வேண்டியதில்லை. தூய தவநெறியில் நாம் நின்றால் சீர் கெட்டு அடிமையாகி குரோதம் வஞ்சனை பொறாமை முதலியவற்றால் பழிபூண்டு அடிமையாகி அடிவாங்குவாராகி சிறுமைப்படும் எம் சமூதாயத்தை மேல் தூக்கிவிடலாம்.

இவர்தான் எம்மைத் தூக்கியவர் என்று சிலை கட்டுவதுலோ அல்லது நம் தமிழ் இனத்தைக் கை தூக்கிவிட்ட தமிழரென்ற பெருமை நமக்கு வேண்யடிதில்லை. அமைதியான உண்மை வாழ்வின் நல்நெறியால் நம் இனத்தை மேலுறவைத்து எம்மையும் நன்மைப்படுத்துவோம்.

இன்றைய களியாட்ட விளையாட்டு வேடிக்கை கேளிக்கை முதலியன விரும்பும் மந்திபோன்ற சில இளைஞர்போலாகாது நாம் நன்மையை எதுவென உணர்ந்து எப்படிவரும் எனத் தெளிந்து வெருளித்தனமுடையோருடைய சகவாசத்தை நீக்கி தவநெறியாலான ஆன்மபலத்தால் எம் சமுதாயத்தை நலம்பெறச் செய்வோம்.

# சைவநெறியின் உயர்ந்த இலட்சியங்களை இஸ்லாமியர் பேணுகின்றனர்!

## அவர்க்கு தீபத்தின் வாழ்த்துக்கள்.

கடந்த ஒரு மாதகாலமாக இந் நாட்டிலுள்ள இஸ்லாமியப் பெரு மக்கள், தங்கள் பெருங்கடமைகளுளொன்றாகிய நோன்பை நிறைவேற்றி புத்தாண்டு விழாக்கொண்டாடினார்கள். இந் நன்னாளில் அவர்கள் எல்லா நலன்களும் பெற்று, நபி பெருமானின் (ஸல்) அறவழி நின்று நல்வாழ்வு வாழ சந்திர தீபம் அவர்களை வாழ்த்துகின்றது.

நோன்பு காலத்தில் இஸ்லாமியப் பெரியார்கள் வழங்கிய அறவுரைகளை, இஸ்லாமிய மக்கள் மாத்திரமன்றிச் சைவமக்களும் சிந்தித்துத் தெளிந்து கொள்வது நன்மைபயக்கும். பின்வரும் நற்பண்புகள் பெரிதும் வற்புறுத்தப்பட்டுவந்தன.

1. இறையச்சம்

2. பிறருக்குதவலும், ஈகையும் (ஸக்காத்து).

3. நோன்பு காலத்தில் புலனடக்கம் புறங்கூறாமை பிறர்க்கின்னா செய்யாமை, இறைவன் தன்னை மன்னிப்பது போற் தானும் பிறர் குறைகளை மன்னித்தல்.

4. மனித சகோதரத்துவம்.

இவைகளை நம் சமயசாரியர்கள் பலரும் வற்புறுத்தியமையைச் சைவ உலகம் ஊன்றிநோக்குவதாக. சாதி வழித் தடுமாறும் சைவ உலகம், "செம்மை வெண்ணீற்று ஒருமையினார்" என்று கூறும் சைவச்சேக்கிழாரின் திருவாக்கை உணர்வதாக:

ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு
உயர் செல்வ மெல்லாம்
அன்றென்றிரு! பசித்தோர் முகம்பார்!
நல்லறமும் நட்பும்நன்றென்றிரு!
நடுநீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே.
—பட்டினத்தடிகள்

நபிகள் நாயகம் (ஸல்) கூறிய அறவழியும் பட்டினத்தார் வாக்கும் ஒத்திருத்தலைப் பாருங்கள். இன்றைய இருள் நிலையிலிருந்து சைவ உலகம் மீளுவதாக.

(யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்)

# கோயில் திருப்பணியை சிலர் விரும்பவில்லை.

கொக்குவில் பொற்பதி ஆலயத்தை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்திட தாம் கோயிலை பாலஸ்தாபனம் செய்தாராம். ஆனல் தனது பங்குதாரரில் ஒருவரான ஒரு ஐயர் பாலஸ்த்தாபனம் செய்ய தான் வைத்த கும்பங்களை அவ்விடத்தில் வந்து எண்ணினாராம். எண்ணிவிட்டு தனது செயல் பிழை என்று கூறினாராம். ஏதோ எல்லாம் கற்றவர் போல் அவர் அங்கு பல கதையும் பேசினாராம்; அவர் பேச்சினால் மக்கள் தன்னை நம்புகிறார் இல்லையாம் அதுவன்றி தமது திருப்பணி வேலைகட்கு யாரும் பொருள் உதவி செய்யக்கூடாதென்று பங்குகாரரான அவர்கள் ஓர் துண்டுப்பிரசுரமும் வெளியிட்டுள்ளனராம். ஓர் கோயில் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய இப்படியான முறையில் தடைகள் ஏற்படுத்தல் முறையாகுமோ என சந்திரதீபத்திடம் ஓர் அந்தணர் முறைப்பட்டுக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கா சத்திரம் அழிந்தது!

## தமிழன் தர்மச்சொத்து தரைமீது சாய்ந்தது!!

## கேட்பார் யாருமில்லையா!!!

# கேவலம்!!!! கேவலம்!!!!!

பாரெலாம் பரந்து கிடக்கும் தமிழர்களைப்பற்றிக் கவலைப்படும் யாழ் மாநகரசபைமொறிசியஸ் தீவில் நடக்கும் உலகத்தமிழர் பண்பாட்டுக் கழகத்திற்கு குரல்கொடுக்க முன்வந்து பத்திரிகை வாயிலாக வெளியிட்ட செய்தியின் பகல்வேஷத்தைக் கண்டு பரிதாபப்பட வேண்டுமே தவிர வேறென்றும் செய்யமுடியாது.

மொறிசியஸ்தீவில் நடப்பது உலகத்தமிழர் பண்பாட்டு மகாநாடேதவிர அரசியல் மகாநாடல்ல என்பதை முதற்கண் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

பண்பாடு என்ற சொல்லுக்கு பொருள் தெரியாதவர் இலங்கைத் தமிழர் நிலைகுறித்துக் குரல்கொடுக்கவேண்டும் என்று எழுதியிருந்த செய்தியை வாசகர்கள் அறிந்திருப்பார்களென நம்புகிறோம். (அந்தச் செய்தி சந்திரதீபத்தில் வரவில்லை) இச்செய்தியை வெளியிட்ட அதே பத்திரிகை கங்காசத்திர விடயத்தைப்பற்றியும் எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர்களின் தர்மச் சொத்தை — இலங்கைத் தமிழர்களே அழிக்கிறார்கள் — தமிழன் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் இலங்கைத் தமிழர்களே அழிக்கிறார்கள் என்று குரல்கொடுக்கவா?

அன்றி சைவமும் தமிழும் வளர்த்த தர்மத்தை, தாகம் தீர்த்த தர்மச்சொத்தை, கங்கைத் தீர்த்தம் கொண்டு புனிதமாக்கப்பட்ட கங்கா தீர்த்தத்தை (கிணற்றை), தமிழன் பாரம்பரியமான பண்பாட்டு முறையான அன்னதானத்தை — ஆண்டாண்டு காலமாக ஆதரித்து நிலைத்து நின்ற அன்னசத்திரத்தை — யாழ் கங்கா சத்திரத்தை அழித்த பெருமை இலங்கைத் தமிழர்களைச் சார்ந்தது என்று பெருமைப்பட்டு மொறிசியஸ்தீவில் போய்ச் சொல்லவா? உலகத்தமிழர்கள் கூடும் அந்த இடத்தில் ஓர் ஊதாரித்தனம் நடந்தது என்று கைகொட்டிச் சிரிக்கவா? அந்த அறிக்கையை வெளிட்டார்கள். கேவலம் கேவலம் தர்மச்சொத்தை காக்க முடியாதவர்கள் தனியார் வசமாவது கையளித்திருக்கலாமே.

இதைவிடக் கேவலம் தெல்லிப்பளைக் கிராமச்சங்கம் கீரிமலைக் கேணியைக் காவாந்துபண்ணி தர்ம வள்ளல் மிட்டாய்க்கடை வல்லிபுரத்தின் பெயரைக் கர்வாந்துபண்ணும் அளவிற்கு ஓர் பாநகரசபையால் கங்காசத்திரத்தைக் காவாந்துபண்ண மாட்டாது இடித்து அழித்து மண்ணோடு மண்ணாக்கித் தமிழன் தர்மச்சொத்தை அழித்து விட்டோம் என்று இறுமாப்புக்கொண்டு திரிபவர்களை பொது மக்கள்தான் காக்க வேண்டும் — கேட்கவேண்டும்.

தமிழன் கலை காலாச்சாரம் பண்பாட்டைக் காக்கவேதான் நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம் என்று மேடை மேடையாக பேசியவர்களின் முதல் வெற்றி இதுதான்.

தர்மத்தை அழித்து தார்மீகக் கடைகளைக்கட்டி வாடகைக்குக் கொடுத்து வாடகைப் பணத்தைச் சம்பாதிப்பதும் பத்துக்கடை கட்டினால் பத்துஇலட்சம் ரூபாய்க்குமேல் ஏலத்தில் கொடுக்கலாம் என்ற ஏராளமான பேராசையாலும் உந்தப்பட்டதால் கங்கா சத்திரம் அழிந்தது.

காப்போர் யாருமில்லை, கவலைப்பட யாருமில்லை, கேட்பார் யாருமில்லை, இக்கேவலமான செயலை.

பறக்கும் காகங்கள் தங்குவதற்கு மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சிலைகளாவது தஞ்சம் கொடுக்கின்றன. கட்டாக்காலி மாடுகளும் சொறிநாய்களும் படுத்தெழும்ப கடைவிறாந்தைகளாவது கட்டியிருக்கிறார்கள். ஆனால் கேவலம் பிற இடத்திலிருந்து வரும் தமிழன் — மனிதன் தங்குவதற்கு இந்த மாநகர எல்லையில் எந்த ஒரு இடமும் இல்லை என்ற பெருமையை ஏற்படுத்திவிட்டார்கள் இன்றுள்ள பெருமக்கள்.

கங்காசத்திரத்தைக் காக்கமுடியாவிட்டால் இந்த சைவம் வளர்க்கும் பத்திரிகை ஆசிரியரிடம் (சந்திரதீபம்) கையளித்திருக்கலாமே. கோயில் சோயிலாக அன்னதானம் செய்யும் எத்தனையோ பேர் இருக்கக்கூடியதாக இதைக் காப்பாற்ற ஆள் இல்லை என்றுதான் இடித்தோம் என்று மொறிசியஸ் மகாநாட்டில் சொல்லவா?

பத்திரிகையில் அறிக்கை விடுவதில் கைதேர்ந்தவர்கள் இலங்கை அரசியல் வாதிகள், ஆனால் செயல்படுவது ஒன்றுமில்லை. இது கண்கண்ட உண்மை.

செய்யமுடியாத விடயங்களைத்தான் பத்திரிகைவாயிலாக அறிக்கை விடுவார்கள். செய்யக்கூடிய விடயங்களை இரவோடு இரவாகப் பக்கத்து வீட்டானுக்கும் தெரியாது செய்துமுடித்துவிட்டு 'கப்சிப்' என்று இருந்துவிடுவார்கள்.

இப்படித்தான் ஒரே குட்டையில் ஊறிய இருமட்டைகளும் பேசாது மௌனம் சாதித்ததால்தான் கங்கா சத்திரம் அழிந்தது. இந்த அக்கிரமச் செயலைத் தலைமுறை தலைமுறையாக எள்ளிநகையாடும் அளவிற்கு செய்து முடித்துவிட்டார்கள் என்செய்வோம்.

கங்காசத்திர விடயமாக நான் எழுகிய அறிவித்தலுக்கும் வேண்டுதலுக்கும் இன்றுவரை பதில்கொடுக்க முன்வராத அதிகௌரவ உயர் திரு அ. அமிர்தலிங்கம் (எதிர்க்கட்சித் தலைவர்) இந்து கலாச்சார அமைச்சர் உயர்திரு இராசதுரை அவர்களுக்கும் எமது மனவேதனையையாகுதல் புரிந்துகொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் புத்தர் கோபாவுக்கு முன் பக்கமாகப் பௌத்த மதத்தவர்கள் வந்துதங்கு வதற்கென நான்கடுக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. அதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

ஆனால் இலங்கையில் எந்தப்பாகத்திலிருந்தும் யாழ்நகர்வரும் தமிழன் தங்குவதற்கு இந்த நகரில் எந்தவொரு இடமுமில்லையே! இந்த உண்மையை உணராதவர்கள் அல்ல மேற்கூறிய இரு அரசியல்வாதிகளும் என்று தமிழ்மக்கள் — குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

உண்மையில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து கிடைத்த பதிலின்படி அந்தப்பெரிய மனிதரின் கூற்றுக்குக்கூட மதிப்புக் கொடுக்கப்படவில்லை என்ற உண்மையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்து கலாச்சார அமைச்சராக ஓர் தமிழர் இருந்துங்கூட இப்படியென்றால்...

இந்த அழகில்த்தான் கொழும்பில் ஓர் இந்து கலாச்சார மண்டபம் அமைக்கப் போகிறார்களாம். இதற்கு கதிர்காமம் இராமகிருஸ்ண மடம் சைவச் சிலைகளை வரவழைத்துக் கொடுப்பதிலும்பார்க்க கிழக்குமாகாணத்தில் புயலால் சீரழிந்து கிடக்கும் சைவக்கோவில்களைப் புனர்தாரணம் செய்ய முன்வரலாமே.

இந்து கலாச்சார மண்டபம் அமைக்க முன்வந்துள்ள இந்துகலாச்சார அமைச்சர் கங்காசத்திர விடயத்தில் இதுவரை எதுவித பதிலும் கொடுக்கவில்லை. சைவசமயக் கோட்பாட்டின்படி தர்மம் வழங்குவதற்கு சத்திரமமைத்து தாகசாந்தியும் தங்குமிட வசதியும் செய்வது அதிமுக்கியமானது என்பதை அறிவாரோ இல்லையோ தெரியாது.

இலங்கைச் சரித்திரத்தில் இதுபோன்ற இழிசெயல்கள் நடந்தது என்பது சரித்திரம் கண்ட உண்மையாகும். இதை மூடிமறைக்க முடியாது. கோட்டை — மன்னன் பராக்கிரபாகுவின் அடிவருடியாக இருந்த புவனேகபாகு என்னும் மலையாளத்து வணிகன் ஒருவன் நல்லூரைப் பாழாக்கி முருகன் ஆலயத்தை இடித்து தரைமட்டமாக்கி யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினன் எனினும் மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி நல்லூர் முருகன் ஆலயத்தைத் திரும்பவும் புனருத்தாரணம் செய்வித்தான். அதேபோல் பண்புள்ளம் கொண்டவர்கள் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் காக்கவேண்டுமென நம்புபவர்கள் அழித்தவர்களுக்கு வேண்டிய புத்திமதியைப் புகட்டி பிறிதோர் இடத்திலாவது இக் கங்காசத்திரத்தைக் கட்டி அத் தருமவான் மிட்டாய்க்கடை வல்லிபுரத்தின் பேரில் விடவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

அதுமட்டுமன்றி கங்காதீர்த்தத்தை (கிணற்றை) சுற்றுமதில் போட்டு குடிநீர் விநியோகத் திட்டத்திற்குப் பாவிக்கும்படி யாழ் மாநகர சபை உறுப்பினர்களையும் பெருங்குடிமக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
'கலைஞானி'

## வானொலியில் சீர்கெட்ட பண்ணிசையா?

மானிப்பாய் வீதி,
உடுவில்,
சுன்னாகம்,

ஆசிரியர்,
'சந்திர தீபம்'

அன்புடையீர்,

திரு. பொன் தெய்வேந்திரன் அவர்கள் இன்று (8-8-80) வெள்ளிக்கிழமை காலை 5-35 மணிக்குப்பாடிய திருமுறைகள்.

இவர் முதலாவது பாடிய திருக்கேதாரப்பண் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தது. இரண்டாந் திருமுறைக்கு உரியது. அதன் விரிவடிவம் இங்கு பொறிக்கப்படுகிறது கவனிக்கவும்.

''தொண்டரஞ்சு களிறும் அடக்கி
சுரும்பார் மல
ரிண்டைகட்டி வழிபாடு செய்யு
மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று
துள்ளவ்வரி
கெண்டை பாய்ச்சுனை நீலமொட்
டலருங் கேதாரமே.''

இதற்குரிய பண்முறை — செவ்வழி பாடும பண்முறையைப்பற்றிக் கவனிக்காதுவிடினும் பண்ணைப் பிழையாகப் படித்து சிவநிந்தை செய்யக் கூடாது.

''தொண்டரஞ்சு'' என்றும்
''மயிலாட'' என்றும்

இவர் பாடியது இப்பதிகத்தின் பொருள் விளங்காது பாடியிருக்கிறார் என்பது புலனாகின்றது. அதுவும் ஆசிரியரை. சங்கீத ஆசிரியரை உருப்படுத்துவதற்கு பொறுப்பானவர் இங்ஙனம் பாடியது பெருந்தவறு அனுமதிக்க முடியாது. இங்ஙனமாக தவறுகள் செய்யக்கூடிய ஆசிரியர்களையேஇவர் உருவாக்குவார்

இந்நிகழ்ச்சியை தயாரித்தளித்தவர் யார்? அவருக்கே திருமுறைகள் தெரியாது என்பது புலனாகின்றது. எத்துணை பரிசுத்தமானதை இங்ஙனம் சிவநிந்தனை செய்து ஒலிபரப்புவது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அவமானமாகும்.

இதுதான் பல தில்லுமுல்லுகளுடன் செய்த தரப்படுத்தல் ஆசிரிய கலாசாலை பிரமுகர்கள் இராமநாதன் இசைக்கல்லூரியினர் பரீட்சையாளரை உபசரித்து உபகரித்தவர்கள் மாத்திரம் தரத்துடனோ தரமின்றியோ தெரிவான தரப்படுத்தல் இனிமேலாவது ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் விழிப்படையுமா?

இங்ஙனம்
அன்புடைய
த. தங்கரசா

## மருதடியானும் தொலைக்காட்சியில் தோற்றினர்

மானிப்பாய்.

பெருமதிப்புக்குரிய ஆசிரியர் அவர்கட்கு,

சென்ற சனிக்கிழமையன்று தமிழுக்கு 7-ம் திகதி மாலை நிகழ்ந்த விசேட புதினம். பிரசித்திவாய்த மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலில் நடந்த கலியாண நிகழ்ச்சி இதற்கு குருக்கள் தங்கள் ஊரைச்சேர்ந்த பிரதிட்டா இரத்தினம் க. குகதாசக்குருக்களும் கரப்பிரான் பிள்ளையார் ஆனைக்கோட்டை மதுசேகரிப்போர்க்கு புரோகிதத்திற்கு போகும் சோமசுந்தர ஐயரும் நிகழ்த்திய கலியாணத்தில் டெலிவிசன் திரையில் இவர்கள் கலியாணப் பெண், மாப்பிள்ளை, ஐயர் பிரதிட்டா இரத்தினம், மேளம் இவைகள் எல்லாம் படம் எடுத்து திரையில் காண்பித்து கோயில்சாமிகளை எல்லாம் படம் எடுத்து திரையில் காண்பித்தார்கள். இவை எல்லாம் நடக்க கோயில் முதலாளி மயிலிட்டி வயிரமுத்து மருமகன் காசிநாதன் தலைமையில் நடந்தது. இங்கே தருவது பொய்புளி தரமாட்டேன். இப்படியான நிலையில் கோயில் எப்படி இருக்கும்.

இப்படிக்கு
ந. துரைச்சாமி

---

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை. நல்லையா அவர்களால் சிவநெறிப் பாதுகாப்பின் பொருட்டு சந்திரதீப அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org